REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒகஸ்ட் 15 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 191 | Monday 15,August, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## எரிபொருள் தொடர்பான தகவல்களுக்கு புதிய செயலி



நாட்டில் எரிபொருள் கிடைக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான சகல தகவல்களை அறிந்து கொள்வதற்கு புதிய செயலியை (App) அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது. 06



கொழும்பிலிருந்து பதுளை வரையான வார இறுதி அதிசொகுசு 'எல்ல ஒடெசி' ரயில் பயணத்தை நேற்று முன்தினம் (13) அதிகாலை 5.30 மணிக்கு போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் அமைச்சர் பயணிகளுடன் உரையாடுவதையும் அமைச்சர் அதிகாரிகள் சகிதம் ரயிலில் பயணிப்பதையும் படங்களில் காணலாம்.

### ஐக்கிய நாடுகளின் ஒழுங்கமைப்பின் 7ஆவது விதிமுறையின்கீழ்

# ஆறு புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைகள் நீக்கம்

### பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி வெளியீடு

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை தொடர்ந்தும் அமுலிலிருக்கும் என அரசாங்கம் அறிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கமானது ஆறு புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைகளை நீக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது ஏனைய காரணங்களுக்காக தடை விதிக்கப்பட்டிருந்த ஆறு புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க ஆறு அமைப்புகள் மற்றும் 316 தனி நபர்களுக்கு எதிராக 06




## புலம்பெயர் தமிழர்களின் உதவிகள் நாட்டை கட்டியெழுப்ப தேவை

### தடையை நீக்கி அவர்களது ஒத்துழைப்பு எதிர்பார்ப்பு



"புலம்பெயர் தமிழர்களையும் அவர்களது அமைப்புகளையும் தடைப்பட்டியலில் வைத்துக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே, அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக முதற்கட்டமாக சில அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகளை நீக்கியுள்ளோம் "என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 06

### வடக்கில் காணி மோசடியால் பாதிப்பா?

## பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் ஆளுநர் அலுவலகத்தில் முறையிடலாம்

### ஆளுநர் ஜீவன் தியாகராஜா மக்களுக்கு அறிவிப்பு



வட மாகாணத்தில் உள்ள தமது காணியில் மோசடியாக ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது போலியான உறுதிப்பத்திரங்களினால் ஏமாற்றப்பட்டு பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் தமது விபரங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என வடமாக ஆளுநர் 06



பாகிஸ்தான் நாட்டின் 75வது சுதந்திர தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர்பாரூக் பர்கி கலந்துகொண்டு பாகிஸ்தான் நாட்டு தேசியக்கொடியை ஏற்றி வைப்பதை படத்தில் காணலாம். படம் அஷ்ரப் ஏ சமட்

## சில கட்சிகள் எதிர்த்தாலும் சர்வகட்சி அரசு அமையும்

### நீதியமைச்சர் உறுதிபடத் தெரிவிப்பு



சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஏதேனும் அரசியல் கட்சி எதிர்ப்பு தெரிவித்தால், அதற்கு ஆதரவளிக்கும் கட்சிகளுடன் இணைந்து சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படும் என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் (13) கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ 06

### வணிக நிறுவனங்கள் தேவையை பொறுத்து

## ஒரு எண்ணின் கீழ் பல வாகனங்களை பதியலாம்

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அதிகளவான வாகனங்களைக் கொண்ட வணிக நிறுவனங்கள் தமது வணிகப் பதிவு எண்களுடன் (BRN) தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்துக்கான பதிவை பெற முடியும் என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது. அரச நிறுவனங்கள் மற்றும் 06

## சிறுவர்களை அதிகமாக தாக்கும் டெங்கு நோய்

### அவதானமாக இருக்க டாக்டர் அறிவுரை



டெங்கு நோய் தாக்கம் பெரியவர்களை விடவும் சிறியவர்களுக்கே அதிகமாக ஏற்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிறுவர் நல வைத்திய நிபுணர் பிரதீப் நவபாலசூரியன் தெரிவித்தார். சூரியனின் செய்தி முகாமையாளர் பரமேஸ்வரன் விக்னேஸ்வரனின் நெறியாள்கையில் ஒலிபரப்பான விழுதுகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 06

## பாடசாலைகள் இன்று முதல் வாரத்தில் 05 தினங்களும் இயங்கும்

### போக்குவரத்து சிக்கல் உள்ள இடங்களுக்கு மட்டுமே சலுகை!

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற சகல பாடசாலைகளினதும் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகும். வாரம் 5 நாட்களும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமைய இன்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை வழமையான அடிப்படையில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை பாடசாலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர், 06

## ஓரணியாக இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் சவால்

### ஏற்றுக்கொள்வதாக சஜித் தெரிவிப்பு



நாட்டில் தற்போது நிலவி வரும் ஸ்திரமற்ற தன்மை மற்றும் வங்குரோத்து நிலைமைகள் காரணமாக பலம் வாய்ந்த நாடுகளுக்கு வேட்டைக்களமாக எமது நாடு மாறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதன் மூலம் தேசிய பாதுகாப்புகூட நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த 06

## சபுகஸ்கந்த பணிகள் மீண்டும் ஆரம்பம்

### இந்த வாரம் முதல் இயங்கும்



சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை இந்த வாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டை வந்தடைய உள்ள கச்சா எண்ணெய் தொகையை தரையிறக்கிய பின்னர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை 06

## நிபந்தனைகளுடனேயே சீன கப்பல் வருகிறது

### 16 முதல் 22 வரை தரித்து நிற்க அனுமதி



சீன கண்காணிப்புக் கப்பலான 'யுவாங் வாங் 5' ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் அனுமதிப்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபை பொறுப்பாளர் நிர்மல் பி சில்வா தெரிவித்துள்ளார். அதன்படி, யுவாங் வாங் 5 தற்போது 06



### அதிவேக நெடுஞ்சாலையில் இரும்பு வேலிகள் திருட்டு

துண்டித்த நால்வர் மடக்கிப்பிடிப்பு 03



போக்குவரத்து பிரச்சினைகள் தீர்ந்து விட்டது;

### அரசாங்க ஊழியர்கள் இனி ஐந்து நாட்களும் கடமைக்கு

03

## திருத்தப்பட்ட அஞ்சல் கட்டணங்கள் இன்று முதல்

### அஞ்சல் மா அதிபர் நேற்று அறிவிப்பு




திருத்தப்பட்ட உள்ளூர் அஞ்சல் கட்டணங்கள் இன்று (15) முதல் அமுலாக்கப்படவுள்ளதாக அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். அதற்கமைய, 15 ரூபாவாக காணப்பட்ட சாதாரண அஞ்சல் கட்டணம் 50 ரூபாவாக திருத்தப்பட்டுள்ளது. 06

## ரெட்டாவின் வங்கி கணக்கில் ரூ. 50 இலட்சம்

### எப்படி வந்தது எனத் தெரியாதாம்



காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளரான ரெட்டா என பரவலாக அறியப்படும் ரனிந்து சேனாரத்னவின் வங்கிக் கணக்குக்கு, அடையாளம் தெரியா நபர் ஒருவர் ஊடாக 50 இலட்சம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் தனது 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# விவசாயிகளின் பிரச்சினை பற்றி வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தலைமையில் சனிக்கிழமை (13.08) இடம்பெற்றது.

இதன்போது விவசாயிகளின் வயல் நிலங்கள் மற்றும் மேட்டு நிலப் பயிற் செய்கைக்குரிய நிலங்கள் வன இலாகாவால் எல்லையிடப்பட்டுள்ளமை, தோட்டச் செய்கைக்கு நீர் இறைக்கும் இயந்திரத்திற்கான மண்ணெண்ணெய் கிடைக்காமை, விவசாயிகளின் அறுவடை மற்றும் கால போக நெற் செய்கைக்கான டீசல் பங்கீடு, சிறுபோக நெல்லுக்கு உத்தரவாத விலை கிடைக்காமை போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், சிறுபோக செய்கை இடம்பெற்று வருகின்ற நிலையில் விவசாயிகளிடம் இருந்து அரிசி ஆலை உரிமையாளர்களால் அரசாங்க உத்தரவாத விலையை விட குறைந்த விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதானால் அதிக விலைக்கு உரம், களைநாசினி என்பவற்றை பெற்று விவசாயம் செய்த விவசாயிகள் நட்டம் அடைவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்கு உடனடியாக தீர்வை முன்வைக்குமாறும் கோரப்பட்டது. இதன்போது குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையடி தீர்வைப் பெற்றுத் தருவதாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் இணைப்பாளர் டினேஸ், மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் ப.சிறி, கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொ ண்டனர்.

## தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

# "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உற்பத்தி விற்பனை நிலையம்



சாவகச்சேரி விஷேட நிருபர்

யாழ். மாவட்ட பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் வெள்ளிக்கிழமை பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ் மாவட்ட சமாசத்தின் உப செயலாளர் திருமதி சுமதி வசந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் வடமாகாண பணிப்பாளர் ரா.சசீலன், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி சி.அஞ்சனாதேவி மற்றும் யாழ் மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.லேணுகாராணி ஆகியோர் கலந்து கொண்டு சஞ்சீவி விற்பனை நிலையத்தை திறந்து வைத்திருந்தனர்.

நிகழ்வில் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண இணைப்பாளர் கு.ரவிக்குமார், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், பனை அபிவிருத்தித் திணைக்கள வடமாகாண முகாமையாளர் லோகநாதன், விழுது சமூக மேம்பாட்டு அமைய நிதி முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

குறித்த "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையமானது விழுது சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அவுஸ்திரேலியன் எயிட் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# O/L மாணவர்களுக்கு கருத்தரங்கு

யாழ். விசேட நிருபர்



கல்வி பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கொன்று நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமாகாணத்திலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதியின் கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் இந்த கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களுக்கு கடந்த கால சாதாரண தர வினாத்தாள்கள் விடைகள் அடங்கிய புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டதுடன் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கருத்தரங்கு தொடர்ச்சியாக வடமாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற நிலையில் இன்றைய தினம் திங்கட்கிழமை (15) கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் செவ்வாய்க்கிழமை மாங்குளத்தில் அமைந்துள்ள மாகாண தொழில்நுட்பக் கல்லூரியிலும் புதன்கிழமை(17) முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும் வியாழக்கிழமை(18) மன்னார் நகர சபை மண்டபத்திலும் வெள்ளிக்கிழமை(19) வவுனியா நகரசபை மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

# வேலாயுதத்தின் சிறப்புப் பக்கமாக வேடதாரி அரங்கிற்கான இதழ்




பிரதம ஆசிரியர்கள் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரைக் கொண்ட சஞ்சிகையினுள் பேராசிரியர் அ.இராமசாமி, பேராசிரியர் சி.மௌனகுரு, கலாநிதி சி.ஜெயசங்கர், எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன், குமரகுரு நிலுஜா, கலாபூசணம் வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை, சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தலிங்கம், மல்லீஸ்வரி ஆதவன் ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

# சாவகச்சேரியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் சனிக்கிழமை ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைதாகியுள்ளார். இதன்போது 38 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரே சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொடிகாமம்-மந்துவில் விபத்தில் இருவர் படுகாயம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் சனிக்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த மந்துவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 50வயதான நபர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

# 45,000 ஹெக்டயர் நிலத்தில் இம்முறை சோளச் செய்கை

அநுராதபுரம் தினகரன் நிருபர்



அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை 45,000 ஹெக்டயார் நிலப்பரப்பில் பெரும்போகத்தின் போது சோளச் செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்படவுள்ள சோளச்செய்கை தொடர்பாக அரசாங்க அதிபரை தொடர்புகொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாம் எதிர்பார்த்துள்ள இலக்கினை அடைவதற்கு உரிய காலத்தில் தேவையான உரம் மற்றும் விதைகள், களை நாசினிகள் என்பன கிடைக்குமாக இருந்தால் சோளச்செய்கையினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். அதனை உரிய காலத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் எமக்கு உறுதியளித்துள்ளார். ஆகையால் சோளச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தயக்கமின்றி தமது செய்கையினை ஆரம்பிக்க முடியும்.

சோளச்செய்கையில் ஈடுபடும் விவசாய சங்கங்களுடன் அது சம்பந்தமாக விசேட கலந்துரையாடல்களையும் நடாத்தியுள்ளோம். 2021/2022 ஆண்டில் சோளச்செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான இரசாயன உரம் அதாவது யூரியா மற்றும் தேவையான களைநாசினிகள் இல்லாத காரணத்தினால் சோளச் செய்கை அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரமின்றி முழு நாட்டிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் விளைச்சலும் குறைவடைந்துள்ளது.

2020, 2021 சிறுபோகத்தின்போது இம் மாவட்டத்தில் 43000 மெட்ரிக் தொன் சோளம் அறுவடை கிடைத்துள்ளது.

தற்சமயம் மாவட்டத்தில் சோளச் செய்கையில் ஈடுபடுபவர்கள் தமது நிலங்களை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இம்முறை சோளச் செய்கையாளர்களுக்கு நியாயமான விலையினை பெற்றுக் கொடுப்பதற்கு விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதுடன் ஒரு கிலோ சோளத்தினை 160 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டுகளை விடவும் அதிகளவிலானவர்கள் சோளச்செய்கையினை மேற்கொள்வார்கள் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# அல் ஹுமைஸரா மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு



களுத்துறை மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளிலொன்றான சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணியினர் களுத்துறை வலய பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்கு கீழ்ப்பட்ட உதைபந்தாட்ட சுற்று போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.ஆர்.எம். றிஸ்கி தெரிவித்தார்.

பங்கு கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரிய குழாம் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் அமைப்பு பாராட்டுக்களை தெரிவித்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் ஆராச்சிக்கட்டுவ விபத்தில் இளைஞன் பலி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் ஆராச்சிக்கட்டுவ பல்லம பிரதான வீதியின் எலகல் பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

எலகல்பிட்டிய, அடிப்பல பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆராச்சிக்கட்டுவ பகுதியை நோக்கிப் பயணித்த லொறியொன்றும், எதிர் திசையில் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுதித்த போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில்

# எரிபொருள் விநியோகத்தில் காணப்பட்ட நெருக்கடி நிலை பாரியளவில் குறைவு

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நாடு பூராவும் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய எரிபொருள் (QR) அனுமதிப் பத்திரத்தினை பயன்படுத்தி தற்பொழுது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த நாட்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் இருந்த நெருக்கடி நிலைமை முற்றாக குறைவடைந்து மக்கள் எவ்வித வரிசைகளுமின்றி எரிபொருளினை பெற்று வருகின்றனர்.

இத் திட்டம் மக்களின் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமைக்கு தீர்வாக அமைந்து காணப்படுகிறது. இருந்தபோதிலும் ஒவ்வொருவகை வாகனங்களுக்கும் வாராந்தம் வழங்கப்பட்டு வரும் எரிபொருள் தொகையானது கார்கள், வான்கள், லொறிகள் மற்றும் முச்சக்கரவண்டிகள் என்பனவற்றினூடாக தொழில்களை மேற் கொள்வோருக்கு போதியளவானதாக இல்லையென வாகன உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாகவும் உரிய தரப்பினர் கவனத்தினை செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தினால் பாரிய சிரமங்கள் தவிர்க்கப்பட்டு இலகுவாக எரிபொருளினை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதை வாகன உரிமையாளர்கள் வரவேற்றுள்ளனர். அதேபோல் இம்மாவட்டத்தில் சமையல் எரிவாயுவின் தட்டுப்பாடும் நீக்கப்பட்டு மக்கள் சமையல் எரிவாயுவினை சிரமங்கள் இன்றி பெற்றும் வருகின்றனர்.

# கொழும்பு சாஹிராவின் 2000ம் ஆண்டு குழுவின் வருடாந்த பொதுக்கூட்டம்



ருஸைக் பாரூக்

கொழும்பு சாஹிரா கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு குழுவின் 7வது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கல்லூரி நீச்சல் வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது 2022/2023 வருடத்துக்கான புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பஹத் லாபிர் (சஞ்சிகை ஆசிரியர்), மொஹமட் ஷியாம் (துணைத் தலைவர்), மொஹமட் ரிப்கான் (துணைத் தலைவர்), ஹஸ்மில் ஹம்தூன் (பொதுச் செயலாளர்), ஷப்ராஸ் சாலி (தலைவர்), ஹுசைன் வாசிக் (பொருளாளர்), மொஹமட் ரில்வான் (முன்னாள் தலைவர்), பாரிஸ் நிலாம்டீன் (துணைத் தலைவர்), இர்ஷான் இர்பான் (உதவி பொதுச் செயலாளர்), அப்துல் அஸிஸ் (தொடர்புப் பொறுப்பாளர்)நிர்வாக உறுப்பினர்களாக மொஹமட் இல்ஹாம், மொஹமட் நசீம், ருக்ஷான் மர்சூக், இம்ரான் மன்சூர், மொஹமட் பாஹிம், இம்ரான் ஓசன், பர்ஸான் ஷஹாப்தீன், ரிஸ்மி சம்சுதீன், ரியாஸ் காசிம், மொஹமட் இக்பால், மொஹமட் தில்ஷாத் மற்றும் சப்ராஸ் சலீம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk



# தினகரன்

THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

15 முதல் 19 வரை
சுபஹ் - 04.46
லுஹர் - 12.16
அஸர் - 03.31
மஃரிப் - 06.26
இஷா - 07.38

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 30
ராகுகாலம் : பகல் : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சதுர்த்தி





கொழும்பிலிருந்து பதுளை வரையான வார இறுதி அதிசொகுசு 'எல்ல ஒடிசி' ரயில் பயணத்தை போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன (13) அதிகாலை கோட்டை ரயில் நிலையத்தில் ஆரம்பித்து வைத்தார். இதன்போது அமைச்சர் ரயிலை பார்வையிடுவதையும் பொதுமக்கள் ரயிலில் பயணிப்பதையும் படங்களில் காணலாம்.

## சமுர்த்தி அலுவலர்களை தாக்கிய பிரதேச சபை உறுப்பினர் தலைமறைவான நிலையில் பொலிஸாரால் தேடுதல்

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இருவரை தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் திவுலப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை

06

## இலங்கை கடற்படைக்கு கண்காணிப்பு விமானம்

### இலங்கையின் கோரிக்கையை ஏற்று இந்தியா கையளிப்பு



இலங்கை அரசின் கோரிக்கையையேற்று இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இந்திய அரசாங்கம் இந்நாட்டுக்கு வழங்கியுள்ளது.

புதிய விமானம் ஒன்றை தயாரிக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதால், ஆரம்ப இரண்டு ஆண்டுகளுக்கு விமானத்தை இலவசமாக வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் இரண்டு ஆண்டுகளின் முடிவில் புதிய டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இலவசமாக வழங்க இந்திய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இக் கடல்சார் கண்காணிப்பு விமானத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி தனது கடற்படைக்கு உள்வாங்கவுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

### போக்குவரத்து பிரச்சினைகள் தீர்ந்து விட்டது;

# அரசாங்க ஊழியர்கள் இனி ஐந்து நாட்களும் கடமைக்கு

### 24ஆம் திகதி அமுலுக்கு வருவதற்கான அறிகுறி

அரச பணியாளர்களை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தி விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை காலாவதியானதன் பின்னர் அரச பணியாளர்களை வாராந்தம் 5 நாட்களுக்கும் பணிக்கு அழைப்பது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி குறித்த சுற்றறிக்கை காலாவதியாகவுள்ளது.

இதன்படி, குறித்த சுற்றறிக்கை காலாவதியாகுவதற்கு முன்னர் அரச பணியாளர்களை சேவைக்கு அழைக்கும் முறைமை தொடர்பில் தீர்மானிக்கப்படும் என அந்த அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே தெரிவித்தார்.

பணிக்கும் செல்லும் அரச பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி, ஒரு மாதத்துக்கு

06

## அதிவேக நெடுஞ்சாலையில் இரும்பு வேலிகள் திருட்டு

### துண்டித்த நால்வர் மடக்கிப்பிடிப்பு

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இரும்பில் அமைக்கப்பட்டிருந்த வேலிகளை துண்டித்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் 6 ஆவது கிலோமீற்றர் முதல் 13 ஆவது கிலோமீற்றர் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இவ்வாறு இரும்பில் அமைக்கப்பட்டிருந்த வேலிகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல். வி.எஸ் வீரக்கோன்

06

## ஜனாதிபதி ரணிலின் தீர்மானம் நல்லெண்ண சமிக்ஞையாக பயன்படுத்தப்பட வேண்டும்

### புலம்பெயர் உறவுகளிடம் அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தினை நல்லெண்ண சமிக்ஞையாக புலம் பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவினை எந்தவிதமான சஞ்சலமும் இன்றி துணிச்சலாக வெளிப்படுத்திய ஈ.பி.டி.பி. கட்சி, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் சுமார் 10 அம்சக் கோரிக்கையை முன்வைத்திருந்தது.

அதில் ஒன்றாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடை நீக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தினை புலம்பெயர்

06

## இந்திய சுதந்திர தினத்திற்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்து



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் தொப்புள் கொடி உறவு கொண்ட இந்தியாவின் 75 வது ஆண்டு சுதந்திர தின பெறுவிழா சிறப்புபெற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கு வெளியே அதிகளவு இந்திய வம்சாவளி மக்கள் பரந்துபட்டு வாழ்கின்றனர்.

இந்தியாவின் உதவிகள் பல இலங்கையில் வாழும் மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கும் கிடைத்துள்ளது. இதில் இந்திய வீடமைப்பு, கல்விக்கான உதவிகள் உள்ளிட்ட தற்போது வழங்கப்படும் நிவாரண பொருட்கள் என குறிப்பிட முடியும்.

இந்திய நாட்டின் 75 வது சுதந்திர தினத்தை கொண்டாடுவதில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கும் பங்கு உண்டு. எனவே இந்திய சுதந்திர தினத்தை யொட்டி மிகவும் அன்னியோன்யத்துடனும், பெரும் உவகையுடனும் தனது வாழ்த்துகளை இ.தொ.கா தெரிவித்து கொள்கிறது.

## திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளுக்கு இடையூறு

### தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்



திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளுக்கு இடையூறுவிளைவிக்கும் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய செயற்பாடுகளை சர்வதேச இந்துமத குருபீடம் கண்டிப்பதோடு, இதை தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுக்கின்றோம் என

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இலங்கைத் திருநாட்டிலே பஞ்ச ஈச்சரங்களிலொன்றாக போற்றப்படும் தேவாரப் பாடல் பெற்ற தலமாகிய தமிழ் இந்து சைவ மக்களுடைய திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய புனர்நிர்மாணப் பணிகள் எல்லாம் நிறைவேறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையிலே இந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அதற்கு இடையூறு செய்வதாகவும் ஆலயத்திற்கு செல்லுகின்ற வீதியின் இரண்டு பக்கங்களிலுமே கடைகளை நிரந்தரமாக அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்துகொண்டு வருவதாகவும் சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைக்கப்படுவதாகவும் இதனால் ஆலயத்தினுடைய புனிதத் தன்மை மீறப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதை இத்தோடு விடாது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் மிகுந்த

06

## சட்டவிரோத மின் வேலியில் சிக்கி மூன்று யானைகள் உயிரிழப்பு

### மிஹிந்தலையில் சம்பவம்



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கி கொம்பன் யானை உள்ளிட்ட மூன்று யானைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக காணி உரிமையாளர் ஒருவரை மிஹிந்தலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவிலுள்ள புதுக்குளம் பகுதியிலுள்ள வயல் காணியொன்றிலேயே இச்சம்பவம் நேற்று (14) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை புதுக்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 51 வயதுடைய காணி உரிமையாளர்

06

## மீண்டும் ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசியுங்கள்

### வஜிர அபேவர்தன எம்.பி. வேண்டுகோள்



2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் விஞ்ஞாபனத்தை மக்கள் குப்பைத் தொட்டியில் வீசாமல் இருந்திருந்தால் நாடு இவ்வாறு குப்பைத் தொட்டியில் வீழ்ந்திருக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கிராமம் கிராமமாக விநியோகிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் விஞ்ஞாபனத்தை மீண்டும் வாசிக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக வஜிர அபேவர்தன எம்.பி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிகரான தலைவர் உலகில் இல்லை. ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்கினால் நிச்சயமாக நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சுங்க அதிகாரிகளாக நடித்து தங்க நகைகள் கொள்ளை

### சென்னையில் இரு இலங்கையர் கைது!



சுங்க அதிகாரிகளாக நடித்து இலங்கை பயணி ஒருவரிடம் தங்க நகைகளை கொள்ளையடித்த இரு இலங்கை பிரஜைகளை சென்னை விமான நிலைய காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையிலிருந்து விமானத்தில் சென்னை சென்றிருந்த 47 வயதுடைய பெண் ஒருவரிடம் சந்தேக நபர்கள் நகைகளை கொள்ளையிட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இலங்கைப் பிரஜைகளான 31 மற்றும் 40 வயதுடைய இருவர், குறித்த பெண்ணை விமான நிலையத்திற்கு வெளியே நிறுத்தி, தங்களை சுங்க அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறி நகைகளை எடுத்துச் செல்வதாக கூறி, அப்பெண்ணின் நகைகளை இருவரும்

06

## அரச துறையில் கடுமையான செலவீனக் கட்டுப்பாடு!

### கடைப்பிடிக்குமாறு பொதுத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

அரச துறை செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான திறைசேரி சுற்றறிக்கையை கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு பொதுத் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த உத்தரவைப் பின்பற்றத் தவறுபவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வைக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், கூட்டுத்தாபனங்கள், சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்கள் காரணமாக அரச செலவினங்களைக் குறைக்குமாறு அவர்களிடம் கூறப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பை நிறுத்துவதற்கான உத்தரவு இருந்த போதிலும் இரண்டு மாகாண நிர்வாகங்கள் 600 பேரை

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.73 | 258.44 |
| கனடியன் டொலர் | 276.09 | 289.20 |
| யூரோ | 361.55 | 376.29 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 257.32 | 268.29 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.68 | 449.77 |
| சுவிஸ் பிராங்க் | 369.23 | 386.78 |
| அமெரிக்க டொலர் | 357.22 | 368.54 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.32 | கட்டார் ரியால் | 98.04 |
| குவைத் டினார் | 1,176.03 | சவூதி ரியால் | 95.99 |
| ஓமான் ரியால் | 937.45 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.26 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 16



**குறள் தரும் சிந்தனை**

*விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்*
*வாய்சோரா வன் கணவன்*

ஓர் அரசின் கருத்தை மற்றோர் அரசுக்கு எடுத்துரைக்கும் தூதன், வாய்தவறிக்கூட, குற்றம் தோய்ந்த சொற்களைக் கூறிடாத உறுதி படைத்தவனாக இருத்தல் வேண்டும்.

## நெருக்கடியைத் தீர்ப்பதில் நம்பிக்கை தரும் நகர்வுகள்

*அந்நிய செலாவணி பற்றாக்குறையின் விளைவாக நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை கடந்த சில மாதங்களாக மக்கள் எதிர்கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலைமைக்கு அவர்கள் உள்ளாகினர். சில வாரங்கள் எரிவாயுவுக்கும் எரிபொருளுக்கும் நாட்டில் கடும் தட்டுப்பாடு நிலவியது. அத்தோடு அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களது விலைகளும் அடிக்கடி அதிகரிக்கலாயின.*

*இந்நிலையில் இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெறத் தொடங்கின. இருந்தும் மக்கள் எதிர்கொண்ட பொருளாதார அசௌகரியங்கள் நீடித்த வண்ணமே இருந்தன.*

*இவ்வாறான சூழலில் கடந்த மே மாதம் 09 ஆம் திகதி அன்றைய பிரதமர் தமது பதவியை இராஜிநாமா செய்தார். அதனைத் தொடர்ந்து நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு பிரதமர் பதவியை ஏற்குமாறு அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்புக்கேற்ப ரணில் விக்கிரமசிங்க அப்பதவியை ஏற்றுக் கொண்டார். அவர் இப்பதவியை ஏற்றதும் நாடும் மக்களும் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார்.*

*பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறி, தனது ஜனாதிபதி பதவியை ஜுலை 14 ஆம் திகதி இராஜநாமா செய்தார். அதனைத் தொடர்ந்து அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க ஜுலை 21 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார். அதன் ஊடாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டன.*

*இவர் இப்பதவியை ஏற்றுக் கொண்டதும் இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டங்களைப் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கலானார். அதன் பயனாக டீசல், பெற்றோல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றை முன்பு போன்றல்லாமல் பாவனையாளர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உருவானது. இவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை வீழச்சியடையத் தொடங்கியது. அத்தோடு எரிபொருட்கள், எரிவாயு என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டதோடு பஸ் கட்டணம் மற்றும் சில பொருட்களின் விலைகளும் குறைக்கப்படலாயின.*

*ஜனாதிபதி பதவியை ஏற்ற குறுகிய காலப்பகுதிக்குள் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை காரணமாக ஜனாதிபதி மீதான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் மேலும் அதிகரிக்கலாயின.*

*இந்நிலையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தலதா பெரஹர விழா மற்றும் நான்கு மகா தேவாலயங்களின் வருடாந்த பெரஹர விழா என்பன வெற்றிகரமாக நிறைவடைந்ததையொட்டி ஜனாதிபதியிடம் பத்திரம் கையளிக்கும் வைபவம் கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, 'நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள போதிலும், அந்த நெருக்கடியில் இருந்து நாட்டை நிச்சயம் மீட்டெடுப்பேன். அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வைக் கொண்டு வரக்கூடிய புதிய பொருளாதாரம் தொடர்பில் சகலரும் புதிய நம்பிக்கைகளுயுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.*

*தற்போது நாட்டில் ஏற்கனவே நிலவி வந்த பொருளாதார நெருக்கடியின் தீவிரம் தணிய ஆரம்பித்திருப்பதைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும். இப்பொருளாதார நெருக்கடி தணிந்து தீர்ந்து சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொள்வதே அவர்களது அவாவாக உள்ளது. மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களை மக்கள் அனுபவிக்கவும் ஆரம்பித்துள்ளனர்.*

*அதனால் கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாகக் கையாண்டது போன்று இப்பொருளாதார நெருக்கடியையும் ஜனாதிபதி வெற்றி கொள்வார். நாடொன்றுக்குத் தேவையான தலைமையையும் வழிகாட்டலையும் வழங்குவதற்குரிய தகுதியும் ஆளுமையும் அனுபவமும் அவரிடமே உள்ளது என்பதை ஜனாதிபதி சொற்ப காலத்திற்குள் வெளிப்படுத்தியுள்ளார்.*

*ஆகவே இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் வளமான பெற்றுக் கொடுப்பதற்கு அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும். அதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.*

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவின் 75 ஆவது குடியரசு தினம் இன்று

## முன்னொருபோதும் இல்லாத பாதுகாப்பு ஏற்பாடு; 5 கி.மீ பிரதேசத்தில் விமானங்கள் பறக்கத் தடை! செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுகிறார் பிரதமர் நரேந்திர மோடி



இந்தியாவின் 75ஆவது குடியரசு தின விழா இன்று கொண்டாடப்படுகின்றது. இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு தலைநகர் டெல்லியில் பல அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

இன்றைய குடியரசு தினத்தன்று பிரதமர் நரேந்திர மோடி டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைக்கின்றார்.

அதேபோல இந்தியா முழுவதும் அனைவரும் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்காகத் தற்காலிக சட்டத் திருத்தமும் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட்டத்தை முன்னிட்டு தலைநகர் டெல்லியில் பொலிசார் குவிக்கப்பட்டு உள்ளனர். குறிப்பாக, பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றும் செங்கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில காலமாகவே பயங்கரவாதிகள் தாக்குதல் முயற்சி அதிகரித்து வரும் நிலையில், தலைநகர் டெல்லியில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உச்சபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.



இன்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடி டெல்லி செங்கோட்டையில் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். இந்த நிகழ்ச்சியில் உலகம் முழுவதும் இருந்து வரும் பல முக்கிய பிரஜைகள், மத்திய அரசின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். விரும்பத்தகாத சம்பவங்களைத் தவிர்க்கும் வகையில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விழாவை அமைதியான முறையில் நடத்தவும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் காரணமாக கொரோனா வழிகாட்டுதல்களும் இதில் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்துவது தொடங்கி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. டெல்லி செங்கோட்டையைச் சுற்றியுள்ள 5 கி.மீ பகுதியில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாகன நிறுத்துமிடத்தில் நெரிசல் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வாகனங்கள் அவ்வப்போது சோதனை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி செங்கோட்டையைச் சுற்றியுள்ள வீதிகளில் அதிகாலை 4 மணி முதல் காலை 10 மணி வரை ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ள வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. ஏனைய வாகனங்களுக்கு அனுமதி இல்லை. மேலும், பல முக்கிய வீதிகளில் நேற்று இரவு 10 மணி முதல் இன்று காலை 11 மணி வரை வணிக பயன்பாட்டு வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. செங்கோட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து மாற்றங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

டெல்லி செங்கோட்டையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரில் காணப் பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் முடிந்தவுடன், அதி முக்கிய பிரஜைகள் வெளியேறிய பின்னரே பொதுமக்கள் கலைந்து செல்ல வேண்டும்.

பொதுமக்கள் சிறிது சிறிதாகக் கலைந்து செல்வதை உறுதிப்படுத்தும் பணிகளைப் பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணிக்க உள்ளனர்.

எந்தவொரு அதிகாரியும் நிகழ்ச்சி முடியும் வரை கண்டிப்பாக பணியமர்த்தப்பட்டுள்ள இடத்தில் இருந்து நகரக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

# கொழும்பில் நேற்று பாகிஸ்தானின் 75 ஆவது சுதந்திரதின வைரவிழாக் கொண்டாட்டம்

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் சமூகத்தினருடன் இணைந்து பாகிஸ்தானை வலுவான, ஆற்றல்மிக்க, முற்போக்கான, சகிப்புத்தன்மை மற்றும் ஜனநாயக இஸ்லாமிய நலன்புரி நாடாக மாற்றுதல் என்றதொனிப்பொருளில் பாகிஸ்தானின் சுதந்திரத்தின் 75வதுஆண்டு வைரவிழாவை நேற்றுக் கொண்டாடியது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகர் மேஜர்ஜெனரல் (ஓய்வுநிலை) உமர்பாரூக் பர்கி பாகிஸ்தான் தேசியகீதம் இசைக்கப்படும் வேளையில் பாகிஸ்தானின் தேசியக்கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளர் திருமதி அஸ்மாகமால், பாகிஸ்தான் ஜனாதிபதி டொக்டர் ஆரிஃப்அல்வியின் செய்தியை வாசித்தார்.

"பா கிஸ்தான் சுதந்திரத்தின் வைரவிழா வை கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், முழுதேசத்திற்கும் எனது மன மார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொ ள்கிறேன். நமது தாயகமான பாகிஸ்தானை ந மக்கு பெற்றுத் தந்த குவைத் ஆசம் முஹம்மது அலிஜின்னாவின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ் நமது மூத்தோர் ஆற்றிய எண்ணற்ற தியாகங்களை இந்த நாள் நினைவூட்டுகிறது. இன்று பாகிஸ்தானின் சித்தாந்தத்தை நிலைநிறுத்துவதற்கும், பாகிஸ்தானை ஒரு சிறந்த நவீன இஸ்லாமிய நலன்புரி தேசமாக மாற்றுவதற்குமான எங்களின் தீர்மானத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. பாகிஸ்தான் பிரதமரின் செய்தியை ஊடக இணைப்பாளர் திருமதி கல்சூம்கைசர் வாசித்தார்.

"பாகிஸ்தான் சுதந்திரத்தின் வைரவிழாவை கொண்டாடும் இன்றையதினம் நமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணமாகும். துணைக்கண்டத்தின் முஸ்லிம்களுக்கு இன்று நாம் மரியாதையினை தெரிவிக்கிறோம். அவர்களின் வீரம் செறிந்த போராட்டத்திற்காகவும், ஒரு புதிய அரசை உருவாக்குவதற்கான தியாகத்திற்காகவும் அவர்களுக்கு எங்கள் ஒட்டுமொத்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்து சுசவால்களையும் முறியடித்து பாகிஸ்தான் என்ற ஒரு நாடு உருவானது என்பது ஒரு அதிசயிக்கத்தக்க விடயமாகும்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.





பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் இங்கு உரையாற்றுகையில், "ஓகஸ்ட்14 என்பது சந்தோசத்தின் நாளாகும். பாகிஸ்தான் உருவாக்கத்தின் நோக்கங்களுக்காக ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் ஒழுக்கத்துடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என்ற உறுதிமொழியை புதுப்பிக்கும் நாளாகும். இன்று நாம் எமது முன்னோர்களையும் தியாகிகளையும் நினைவு கூர்வதுடன், சுதந்திரமான தாயகத்தை எமக்கு வழங்குவதற்கு அசாதாரண தியாகங்களைச் செய்தமைக்காக அவர்களுக்கு எமது நன்றிகளை செலுத்துகின்றோம். அனைத்துநாடுகளுடனும், குறிப்பாக நமது அண்டை நாடுகளுடனும் நல்லுறவை பேணுவதை நாங்கள் உறுதியளிக்கிறோம். எனவேதான் SAARC அமைப்பின் மூலம் தெற்காசியாவில் பிராந்திய இணைப்புக்கு பாகிஸ்தான் வலுவான ஆதரவாளராக தொடர்ந்து இருந்து வருகிறது. பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளும் சார்க் அமைப்பின் முக்கிய அங்கத்தினர்கள். மேலும், இருநாடுகளும் அவை உருவானதில் இருந்து வலுவான நட்பு மற்றும் சகோதரத்துவப்பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன" என்றுகுறிப்பிட்டார்.





இராஜதந்திர உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினர், உள்ளூர் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பாகிஸ்தானின் ஆதரவாளர்கள் உட்பட ஏராளமானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருக்கும் பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான PNS Taimur கப்பலின் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அஷ்ரப் ஏ. சமட்,
ஏ. எஸ். எம். ஜாவிட்

# 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்துடன் கைகோர்க்கும் Huawei

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கில் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, விநியோக பங்காளியாக சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் PwC ஸ்ரீ லங்கா ஆகியவற்றால் நிறுவப்பட்ட மனிதநேய ஒன்றிணைவு செயற்றிட்டத்திற்கு CBL Group, Citi, Sunshine Holdings PLC மற்றும் Huawei Technologies Lanka Co ஆகியவையும் பின்னர் படிப்படியாக இணைந்து கொண்டன.

சமூக நல்வாழ்வை இலக்காகக் கொண்ட பங்காளர்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும் 'மனிதநேய ஒன்றிணைவு' செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த 200,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். தற்போது 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்படுவதுடன், மேலும் 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

"இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் இயங்கி வரும் ஒரு நிறுவனம் என்ற வகையில், இலங்கை மக்களுடன் நாங்கள் என்றும் ஒன்றாக இணைந்து நிற்கிறோம். எனவே, தற்போதைய நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை ஆதரிப்பதற்காக எங்கள் மூலோபாய பங்காளிகளான டயலொக் ஆசிஆட்டாவுடன் கைகோர்க்க முடிவு செய்தோம். இலங்கை விரைவில் ஒரு நிலையான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்" என்று Huawei Sri Lanka பிரதம நிறைவேற்று அதிகாரி Liang Yi தெரிவித்தார்.




இடமிருந்து வல மாக சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் டொக்டர் வின்யா ஆரியரத்ன, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி Liang Yi, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதான தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேடா, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் சிரேஷ்ட தயாரிப்பு தீர்வு முகாமையாளர் காவிந்த மஞ்சுள.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும தலைமை தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேடா கருத்துத் தெரிவிக்கையில், 'மனிதநேய ஒன்றிணைவு' மனிதாபிமான செயற்றிட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்டமைக்காக

## பாதிக்கப்பட்ட 200,000 அதிகமான குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதே குறிக்கோள்

அனைத்துப் பங்காளிகள் சார்பாக, Huawei இற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். 200,000 அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களை ஆதரிப்பதே எங்கள் இலக்காகும், மேலும் இந்த இலக்கை அடைய சமூக நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பிற நிறுவனங்களையும் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். அனைவரும் தங்களின் கிரெடிட்/டெபிட் கார்ட், வங்கி வைப்பு eZ Cash, Star Points, genie அல்லது 0776 421421 என்ற இலக்கத்திற்கு Top up செய்வதன் மூலம் இணைந்து கொள்ள முடியும்.

நன்கொடை வழங்குதல் தொடர்பாக செயல்முறை பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.lk/don_E இற்கு செல்லுங்கள். மனிதநேய ஒன்றிணைவு பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.dialog.lk/manudammehewara இற்கு செல்லுங்கள்" எனக் கேட்டுக் கொண்டார்.

# விநாயக சதுர்த்தி



பரமசிவன் கணேசனை கணங்களின் தலைவனாக 'கணபதி'யாக நியமித்தார். அவருக்கு அனிமா, மகிமா முதலிய அஷ்டசித்திகளையும் மனைவிகளாக பிரம்மதேவன் அளித்து கணபதியைப் பலவாறு துதி செய்தார். கணபதியும் மகிழ்ந்து 'பிரம்மனே, வேண்டிய வரம் கேள் ' என்று கூற பிரம்மன் 'என் படைப்பெல்லாம் தங்கள் அருளால் இடையூறின்றி நிறைவேற வேண்டும்' என்று வரம் கேட்க விநாயகரும் பிரம்மனுக்கு வரமளித்தார்.

இந்து மக்கள் அனுட்டிக்கின்ற விரதங்களில் விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித் திதியன்று விநாயக சதுர்த்தி அனுட்டிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் உலகெங்கணுமுள்ள இந்துக்கள் பயபக்தியோடு விநாயக வழிபாடியற்றி, உண்ணா நோன்பிருந்து, தான தர்மங்கள் செய்து கொண்டாடுகின்றனர். ஆவணி மாதம் சுக்ல பட்ச சதுர்த்தி தினத்தில் அதிகாலையில் எழுந்தி மூஷிக வாகனனை முழு மனதோடு நினைத்து நீராட வேண்டும். பூஜை அறையில் சுத்தமான மனப்பலகை வைத்து அதன் மீது கோலம் போட வேண்டும். அதன் மேல் தலைவாழை இலை ஒன்றை வடக்கு பார்த்து வைத்து அதன் மேலே பச்சரிசியை பரப்பி வைக்க வேண்டும்.

பிள்ளையார், விக்னேசுவரர், கணேசர், கணபதி, கணாதிபர், ஐங்கரன், ஏரம்பன், இலம்போதரர், குகாக்கிரசர், கந்தபூர்வசர், மூத்தோன், ஒற்றைமருப்பினன், மூஷிகவாகனன், வேழமுகன், கயமுகன், ஓங்காரன், பிரணவன் போன்ற இன்னும் பல நாமங்கள் விநாயகருக்கு வழக்கிலுள்ளன. இவற்றுள் 'விநாயகர்' என்பது 'மேலான தலைவர்' என அர்த்தப்படும். விமேலான: நாயகர் தலைவர் தனக்கு மேலாக ஒருவர் இல்லாதவர் எனப் பொருள்படும். அதுபோலவே 'விக்னேஸ்வரர்' என்றால் 'இடையூறுகளை நீக்குபவர்' என்றும், 'ஐங்கரன்' என்றால் (தும்பிக்கையுடன் சேர்த்து) ஐந்து கரங்களை உடையவரெனவும்' அர்த்தப்படும். 'கணபதி' என்பது கணங்களுக்கு அதிபதி என்று பொருள்படும். இவ்வாறே அவரது சகல நாமங்களுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் அந்தந்தப் பெயர்களிலேயே பொதிந்துள்ளன.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



84

**பெயர்:** கழறிற்றறிவார் நாயனார்

**குலம்:** அரசர்

**பூசை நாள்:** ஆடி சுவாதி

**அவதாரத் தலம்:** கொடுங்கோளூர்

**முக்தித் தலம்:** திருவஞ்சைக்

**வரலாற்று சுருக்கம்:**

"கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கும் அடியேன்" திருத்தொண்டத் தொகை.

கழறிற்றறிவார் நாயனார் சிவ பக்தி பற்றி ஒருபதிவில் விளக்கம் தர இயலாது ஆகையால் இருதனி தனி பதிவுகளாக அறியலாம்

சோழ நாட்டிலே சேரமன்னர் குலமும் உலகும் செய்த பெருந் தவப்பயனாகப் பெருமாக்கோதையார் அவதரித்தார். அரச குமாரராகிய அவர், மண் மேற் சைவநெறி வாழ வளர்ந்து, முன்னைப் பல பிறவிகளிலும் பெற்ற பேரன்பினாற் கண்ணுதற் பெருமானாகிய சிவபெருமானுடைய திருவடிகளையே பரவும் கருத்துடையராயினார் தமக்குரிய அரசியற் தொழிலை விரும்பாமல் திருவஞ்சைக்களமென்னுந் திருக்கோயிலையடைந்து சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்துறைதலை விரும்பினார்.

உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல எனவுணர்ந்த அப்பெருந்தகையார், நாடோறும் விடியற்காலத்தே நித்திரை விட்டெழுந்து நீராடித் திருவெண்ணீறணிந்து மலர் கொய்து மாலை தொடுத்தமைத்துத் திருவஞ்சைக்களத் திருக்கோயிலுக்குச் செல்வார். அங்கு திருவலகும் திருமெழுகுமிட்டுத் திருமஞ்சனம் கொணர்ந்து இறைவனுக்கு நீராட்டி, முன்னைய அருளாசிரியர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாட்டினை ஒருமை மனத்துடன் ஓதி அருச்சித்து வழிபாடு புரிந்து வருவார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்

தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*(19217) அக்னிகர்ப்பை என்று அழைப்பது யாரை?* **அன்னை மகாலட்சுமியை**

*(19218) அன்னை மகாலட்சுமியை அக்னிகர்ப்பை என்று அழைப்பது ஏன்?* **அக்னி குண்டத்தில் வாசம் செய்ததால்**

*(19219) ரத்தினாவதி என்று அழைப்பது யாரை?* **அன்னை மகாலட்சுமியை**

*(19220) அன்னை மகாலட்சுமியை ரத்தினாவதி என்று அழைப்பது ஏன்?*

**ரத்தின வடிவம் எடுத்ததால்**

*(19221) ஜானகி என்று அழைப்பது யாரை?* **அன்னை மகாலட்சுமியை**

*(19222) அன்னை மகாலட்சுமியை ஜானகி என்று அழைப்பது ஏன்?* **ஜனக மகாராஜனுக்கு மகளானதால்**

*(19223) சீதை என்று அழைப்பது யாரை?* **அன்னை மகாலட்சுமியை**

*(19224) அன்னை மகாலட்சுமியை சீதை என்று அழைப்பது ஏன்?*

**பூமிக்குள்ளே கலப்பையின் நுனியிலிருந்து வெளியேற்றப் பட்டமையால்**

*(19225) ஸ்ரீ என்று அழைப்பது யாரை?* **அன்னை மகாலட்சுமியை**

*(19226) அன்னை மகாலட்சுமியை ஸ்ரீ என்று அழைப்பது ஏன்?*

**பாற்கடலிலிருந்து தோன்றியதால்**

*(19227) வரலட்சுமி வழங்குவது எதனை?*

**எட்டு விதச் செல்வங்களை**

*(19228) எட்டு விதச் செல்வங்களை தருவதுடன் வேறு எதனை தருகிறாள்?* **தாலிப் பாக்கியத்தையும் வரலட்சுமி வழங்குகிறாள்.**

*(19229) திருமணமான பெண்கள் மகாலட்சுமியை போற்ற வரலட்சுமி விரதத்தை மேற்கொள்வது ஏன்?*

**தாலிப் பாக்கியத்தை வழங்குவதால்**

*(19230) மகாலட்சுமிக்கு உகந்தது என்ன எண்ணெய் விளக்கு?*

**நெய் விளக்கு**

*(19231) சகலவித செல்வத்தையும் வீட்டில் நலனையும் தருவது எது?* **நெய் விளக்கு வழிபாடுதான்.**

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 2



தற்போதைய கண்டுபிடிப்புகளின்படி அணுத்துணிக்கைகள் ஒரு வித நீள் வட்டப்பாதை சுழற்சியில் இருந்துகொண்டு சுயமாக உருவாகிய சக்திப்புலத்தினால் மிக நுண்ணிய துணிக்கைகள் அதிர்ந்து கொண்டு உள்ளதாகக் கூறப்படுகிறது. சுயமாக இயங்கும் இந்த சக்திப்புலம் ஹிக்போஸன் சக்திப்புலம் எனப்படுகிறது. இந்த சக்திப்புலம் எங்கிருந்து வருகிறது என்பதை அறிவியல் இன்னும் கண்டுபிடிக்க முடியாததால் இவை சுயஇருப்பு உடைய சக்திப்புலங்கள் என்று அறிவியல் கூறுகிறது. இதனால் இவை கடவுள் துணிக்கைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்த ஆற்றலின் மூலமும், இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமும் இந்திய தத்துவஞானத்தால் "நாதம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த நாதசக்தி எங்கும் நிறைந்ததும் இயற்கையின் மையமானதும், நுண்ணியதுமாக இருந்துகொண்டு எல்லா சக்திகள், அதிர்வுகள், அசைவுகளுக்கும் மூலமாக இருக்கிறது. இயற்கையை ஆழமாக ஆராய்ந்த அறிஞர்கள் மிக நுண்ணிய சப்தம் ஓங்காரமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த ஓங்காரநாதம் சுயமாக வெளிப்பட்ட எங்கும் நிறைந்த, நித்தியமான உணர்வு சக்தியான பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட பரிணாம அதிர்வாகும்.

கடிகாரத்தில் உள்ள ஊசலை அலையவிட்டால் அது தொடர்ச்சியாக கடிகாரத்தை நாமாக நிறுத்தும் வரை அசைந்து கொண்டிருக்கும் என்பதை நாமறிவோம். இதைப் போன்று பிரபஞ்சத்தில் இருக்கும் நுண்ணிய துணிக்கைகள் ஓங்காரம் எனும் நாதத்தினால் தூண்டப்பட்டு அசைந்து கொண்டிருக்கின்றன. இயற்கையின் சுழற்சி எப்படி ஒரு விளையாட்டு ஊசல் சுழன்று கொண்டு இருக்கிறதோ அப்படி சுழன்று கொண்டு இருக்கிறது.

இந்த விளையாட்டு ஊசலின் இயக்க சக்தி சிறிது காலத்தில் தேய்ந்து விடும் ஆனால் நித்தியமான பரிணாம சக்தியான பிரம்மத்தின் இயக்க சக்தி எப்போதும் தேய்மானம் அடையாமல் நிரந்தரமாக இருக்கிறது.

சப்தசுரங்கள் என்பவை ஓங்காரத்தின் ஏழு வித்தியாசமான அதிர்வுகளாகும். இந்திய இசையினை பாரம்பரிய இசை, மெல்லிசை என இரண்டு விதமாக பிரிக்கலாம். பாரம்பரிய இசையின் அமைப்பினை சுரம், பதம், லயம், மார்க்கம் என நான்கு பகுதிகளுடையதாக பிரிக்கலாம். சுரம் இல்லாத பாடல்கள் அபிதானவான எனப்படும். இவை அபிவாதனம் – உரையாடல் செய்யும் போது பாவிக்கும் கோர்வையான சொற்களைக் குறிக்கும். ஓங்காரம் என்ற மூல நாதம் பிரபஞ்சத்திலுள்ள எல்லாஅதிர்வு சக்திகளினதும் தொகுப்பாகும்.

இதுவே அனைத்து இசைச்சுரங்களிற்கும் மூலமாகும். எப்படி சூரியனிலிருந்து ஏழு நிறங்கள் வெளிப்படுகிறதோ அதைப்போல் ஓங்காரத்திலிருந்து சப்தஸ்வரங்கள் வெளிப்படுகிறது. இந்த இசைச்சுரங்கள் ஸ, ரி, க, ம, ப, த, நி என ஏழாக வெளிப்படுகின்றன.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்





கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தில் பௌர்ணமி தினத்தன்று விசேஷ பூஜை நடைபெற்றது. நிகழ்வில் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகத்தில் பின் கீழ் மண்டபத்திற்கு பளிங்கு கல் அமைக்கும் பணியை நிறைவேற்றிக் கொடுத்த சாய் ஸ்ரீ முருகேசு தெய்வநாயகம் பிள்ளையை சாய்பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் பொன்னாடை அணிவித்து கௌரவம் அளித்து சாய் பிரசாதம் வழங்கினார். உப தலைவர் இராஜயோதியும் அருகில் இருப்பதை காணலாம்.

## ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தினரின் இலங்கைக் கிளையினரால் கொழும்பு கொட்டாஞ்சேனையில் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலயத்தில் இம்மாதம் ஆகஸ்ட் 19 வெள்ளிக்கிழமையன்று பகவான் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அவதரித்த நன்னாள் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும்.

அன்றைய தினம் அதிகாலை 6:00 மணி முதல் இரவு 8 மணி வரை விஷேட ஆராதனைகள் நடைபெறும். காலை 6 மணிக்கு மங்கள ஆரத்தியைத் தொடர்ந்து துளசி ஆரத்தி மற்றும் தர்சன ஆரத்தி, குரு பூஜை நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரி சங்கினால் பால் அபிஷேகமும் ஆராதனையும் செய்யப்படும். அதனைத் தொடர்ந்து குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு பக்தர்கள் தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

பிற்பகல் 12:30 மணிக்கு ராஜபோக ஆரத்தியும் மாலை தூப ஆரத்தி, துளசி ஆரத்தி, சந்திய ஆரத்தி நடைபெற்று குழந்தைகிருஷ்ணரை தொட்டிலிலிட்டு பக்தர்கள் தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

இரவு 8 மணிக்கு ஸ்ரீஸ்ரீ ராதா ராதாகிருஷ்ணருக்கு மகா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட ஆராதனை நடைபெற்ற பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும். பக்தர்கள் அபிஷேகத்திற்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள் மற்றும் தேவையான பொருட்களையும் கொண்டு வந்து கொடுக்கலாம்.

**சனிக்கிழமை வியாச பூஜை**

மறுநாள் 20ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிருஷ்ண பக்திக் கழக ஸ்தாபகரும், ஆன்மீகக் குருவுமான அருட்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை நடைபெறும்.







மட்டக்குளி பேர்குசன் வீதி 279ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் பால்குட பவனி ஆலய அறங்காவலர் எஸ். வி . விநோதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.





கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரிம்மன் கோவில் ஆடிப்பூர பால்குட பவனி கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகிய போது திரளான பக்தர்கள் கலந்து கொண்டிருப்பதையும் ஆலய அறங்காவலர் ஸ்ரீவித்தியானந்த சுவாமிகள் பாலாபிஷேக பூஜை செய்வதையும் காணலாம். (படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

# கைதான 'ஹரக் கட்டாவை அழைத்துவர நடவடிக்கை!

## துபாய் அரசுடன் பேச்சு நடத்தவும் முடிவு



துபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் என கூறப்படும் மிதிகம நந்துன் சிந்தக அல்லது 'ஹரக் கட்டா'வை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துபாய் பொலிஸார் மற்றும் அந்நாட்டு அரசாங்கத்துடன் இது தொடர்பில் உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் துபாய் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹரக் கட்டா தனது மனைவியுடன் பிரான்ஸ் செல்வதற்காக துபாய் விமான நிலையத்துக்கு வந்தபோதே குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது, 'ஹரக் கட்டா' துபாய் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், போதைப்பொருள் கடத்தல் தொடர்பா க அவரிடம் நீண்ட நாட்களாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தனியார் பஸ் சேவைகள்:

# இன்று முதல் முழுமையாக சேவையில் ஈடுபட முடிவு

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



தனியார் பஸ் சேவைகளை இன்று திங்கட்கிழமை முதல் முழுமையாக சேவையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தனியார் பஸ்களை இன்று முதல் முழுமையாக சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதே வேலை பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஐந்து தினங்களுக்கு நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ள நிலையில் பாடசாலை பஸ் சேவைகளையும் வழமை போன்று நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதே வேளை, அரசாங்க ஊழியர்களையும் வழமை போன்று 5 தினங்களுக்கு கடமைக்கு அழைப்பதற்கான தீர்மானத்தை பொது நிர்வாக அமைச்சு மேற்கொண்டுள்ள நிலையில் அரசாங்க ஊழியர்களின் போக்குவரத்தை கருத்திற்கொண்டு முழுமையான அளவில் பஸ் சேவைகளை முன்னெடுக்க வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிவேக நெடுஞ்சாலையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தார். அதிவேக நெடுஞ்சாலைக்கு மனிதர்கள் மற்றும் விலங்குகள் நுழைவதை தடுப்பதற்காக இரும்பினால் தயாரிக்கப்பட்ட வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் அவை துண்டிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்களால் குறித்த இரும்பு வேலிகள் துண்டிக்கப்பட்டு திருடப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்தநிலையில், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இரும்பில் அமைக்கப்பட்டிருந்த வேலிகளை துண்டித்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ் வீரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

## திருக்கோணேஸ்வரர் ஆலய... (03 ஆம் பக்கத் தொடர்)

கவனமெடுக்க வேண்டும். அவர்களது மாவட்டத்திலே உள்ள இவ்வாலயத்தில் அத்துமீறிய பௌத்த ஆதிக்கம் வருவதை தவிர்க்க வேண்டும். இதற்கு ஜனாதிபதி, பிரதமரும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது ஏகோபித்த குரலாக பாராளுமன்றத்தில் ஒலிக்கவேண்டும்.

இது தமிழ் மக்களுடைய இந்து சமய மக்களுடைய பாரம்பரியமான காலாகாலமாக பாதுகாத்து வருகின்ற இந்த கோணேசர் ஆலயத்தின் புனிதம் பாதுகாக்கப்படவேண்டும்.

உடனடியாக இதை தடுத்து நிறுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சட்டவிரோத மின் வேலியில்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, சந்தேக நபர் எந்த விதமான அனுமதியும் இன்றி தனது வயல் நிலத்திற்கு மின்கம்பிகளை பொருத்தியுள்ளார் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்கள அநுராதபுரம் அலுவலக அதிகாரிகளும் மிஹிந்தலை பொலிஸாரும் தனித்தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் .

## ஜனாதிபதி ரணிலின்... (03 ஆம் பக்கத் தொடர்)

உறவுகள் சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதார பலத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஏனைய கோரிக்கைகளும் முன்னுரிமை அடிப்படையிலாயினும் நிறைவேற்றப்படுவதுடன், தடைசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார்.

## சுங்க அதிகாரிகளாக... (03 ஆம் பக்கத் தொடர்)

எடுத்துச் சென்றுள்ளனர். சந்தேகமடைந்த குறித்த பெண், சுங்க அதிகாரிகள் மற்றும் காவல்துறையினரிடம் சந்தேகநபர்கள் தொடர்பில் முறைப்பாடு அளித்தார்.

இதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த காவல்துறையினர், சந்தேக நபர்களை கைதுசெய்தனர்.

## அரசாங்க ஊழியர்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

செல்லுபடியாகும் வகையில் அரச பணியாளர்களை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தி சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அதற்கு முன்னரும் எரிபொருள் பிரச்சினையை கருத்திற் கொண்டு பல சந்தர்ப்பங்களில் அரச பணியாளர்களை பணிக்கு அழைக்கும் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

## சமுர்த்தி அலுவலர்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆரம்பித்துள்ளனர்.

பதுராகொட பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரண்டு அதிகாரிகள் QR குறியீடுகளை சரிபார்த்துக் கொண்டிருந்த போதே இவர்கள் தாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லேவெல பொலிஸ் நிலைய அதிகாரிகள் சந்தேக நபரை கைது செய்வதற்காக பல தடவைகள் அவரது வீட்டுக்குச் சென்றபோதிலும், அந்தச் சந்தர்ப்பங்களில் அவர் வீட்டில் இருக்கவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆறு புலம்பெயர்...

விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கப்படவில்லை என்றும் தொடர்ந்தும் அது அமுலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையடுத்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே மேற்படி தடைகள் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் அறிக்கைகளின் படி 18 அமைப்புகளும் 577 நபர்களும் தடை செய்யப்பட்ட அமைப்புகளாகவும் நபர்களாகவும் பாதுகாப்பு அமைச்சினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி அவுஸ்திரேலிய தமிழர் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை, உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு குழு, திராவிட ஈழ மக்கள் பேரவை, கனடிய தமிழ் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, ஆகியவற்றின் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்கமைப்பின் 4 (7) ஆவது விதிமுறையின் கீழ் இந்த தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கடந்து 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரசாங்க வார்த்தமானியில் இந்த அமைப்புகளின் தடை தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் உடன்படிக்கையின் படி மேலும் 3 அமைப்புகள் மற்றும் 55 நபர்களுக்கு எதிராக தடை விதிப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

## அரச துறையில் கடுமையான... (03 ஆம் பக்கத் தொடர்)

புதிதாக ஆட்சேர்ப்பு செய்ய திட்டமிட்டுள்ளதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எரிபொருள், மின்சாரம், நீர் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் உள்ளிட்ட சேவைகளின் பயன்பாடு கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கட்டிடங்கள் தொடர்பான புதிய வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தங்களில் நுழைவது மறு அறிவிப்பு வரும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அந்தந்த நிறுவனங்களின் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலுடன் சரியான தேவை மதிப்பீடு மற்றும் செலவுபயன் பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் தற்போதைய ஒப்பந்தங்களை நீடிக்க முடியும்.

குத்தகையை நீடிப்பதற்கு முன் பொது திறைசேரியின் முன் அனுமதி அவசியமாகும்.

ஆட்சேர்ப்பு உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்றும், வணிகத் தொடர்ச்சியைத் தக்க வைக்க தேவையான ஆட்சேர்ப்பு இருந்தால், அதற்கு பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் இருக்க வேண்டும்.

ஊழியர்களுக்கு புதிய கொடுப்பனவுகள் வழங்கப்படக்கூடாது, அனைத்து நிறுவனங்களும் மின்னணு தொடர்பு தளங்களுக்கு மாறவும், காகித பயன்பாட்டை முடிந்தவரை குறைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிதியுதவி பயிற்சி திட்டங்களுக்கு கட்டுப்பாடு இல்லை என்றாலும், உள்நாட்டு நிதியை வெளிநாட்டு பயணம் அல்லது பயிற்சி திட்டங்களுக்கு பயன்படுத்த முடியாது என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் தொடர்பான...

தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் தலைவர் ஜயந்த டி சில்வா கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் கிடைக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்களை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

விரைவில் இந்த செயலி பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

நாட்டின் எந்தப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்களை இந்த செயலியின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வரவிருக்கும் எரிபொருள் தொடர்பான சகல தகவல்களையும் இதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

அதன்படி, கிவ்.ஆர் குறியீடு முறையின் கீழ் குறித்த ஒரு பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஏனைய பகுதியில் அமைந்துள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளைப் பெறுவதற்கான வாய்ப்பை இந்த செயலியின் ஊடாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதன் மூலம் நுகர்வோர் எரிபொருளை பெற்றுகொள்ள முடியும்.

மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றுலா பயணங்கள் மேற்கொள்ளும் போது அந்த பகுதிகளில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்ளும் வகையில் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சில கட்சிகள் எதிர்த்தாலும் ...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர், “அனைத்து கட்சி ஆட்சி அமைப்பதற்கு எதேனும் அரசியல் கட்சி எதிர்ப்பு தெரிவித்தால், எங்களுக்கு வேறு வழியில்லை, சேர விரும்பும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம். இது அனைத்துக் கட்சியாக இல்லாமலும் இருக்கலாம், ஆனால் பல கட்சிகளின் ஆதரவைப் பெற முயற்சிக்கிறோம்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கும் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கும் தொடர்பில்லை எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட காணி...

ஜீவன் தியாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாணத்தில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலோ அல்லது வேறு எந்த பாகத்திலும் இருக்கின்ற நிலையில் அவர்களின் காணிகள் மோசடியான வழியிலோ போலியான உறுதிப்பத்திரங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பில் ஆளுநர் செயலகம் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கின்றது.

ஆகவே பாதிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் உரிமை கோரக் கூடிய ஆதாரங்களுடன் காணிப்பதிவு பற்றிய விபரங்களை பழைய பூங்கா வீதியில் உள்ள ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சபுகஸ்கந்த பணிகள் ...

ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

100,000 மெற்றிக் தொன் கச்சா எண்ணெயுடனான சரக்கு கப்பல் சனி இரவு (13) நாட்டை வந்தடையத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் மாதிரிப் பரிசோதனை இன்று மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், 120,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெயை ஏற்றிய மற்றுமொரு சரக்கு கப்பல் எதிர்வரும் 23ஆம் திகதிக்கும் 29ஆம் திகதிக்கும் இடையில் நாட்டை வந்தடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு எண்ணின்...

வணிக நிறுவனங்கள் வணிகப்பதிவு எண்களின் கீழ், ஒன்று அல்லது பல கைப்பேசி எண்கள் மூலம் பதிவு செய்யலாம் என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, http://fuelpass.gov.lk என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து, வணிக பதிவு எண் (BRN) வகையின் கீழ், முதலாவது வாகனத்தைப் பதிவு செய்யலாம். அதன்பின் பதிவுசெய்யப்பட்ட கைப்பேசி எண்ணின் சுயவிவரத்தில் உள்நுழைந்து, ‘Add’ என்பதை அழுத்துவதன் மூலம் தமது வணிகத்துக்குரிய மேலும் பல வாகனங்களை சேர்க்க முடியுமென இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA தெரிவித்துள்ளது.

## புலம்பெயர் தமிழர்களின்...

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவிகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் இதனை அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டே முதற்கட்டமாகச் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தொடர்ந்து தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் அமைப்புக்கள் குறித்தும், தனிநபர்கள் தொடர்பிலும் அரசு அவதானம் செலுத்தும்" என்றார்.

## சிறுவர்களை அதிகமாக ...

சிறுவர்களுக்கு இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும் எனவும் வைத்திய நிபுணர் பிரதீப் நவபாலசூரியன் மேலும் தெரிவித்தார்.

## ரெட்டாவின் வங்கி....

வங்கிக் கணக்கு உள்ள தனியார் வங்கிக்கு முறைப்பாடளித்துள்ளதாகவும் நேற்று (14) உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ரெட்டா எனும் ரனிந்து சேனாரத்ன குறிப்பிட்டார்.

‘ நான் CIMA தகுதிமிக்க கணக்காளர். இவ்வாறான அடிப்படையற்ற பண வைப்புக்கள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து எனக்கு தெரியும். எனது கணக்குக்கு பணத்தை வைப்பிலிட்டு எம்மை, தவறாக சித்திரிக்க முன்னெடுக்கப்படும் மிக கீழ்த்தரமான சூழ்ச்சிகள் இவை.

இந்த அடையாளம் இல்லாத பண வைப்பு குறித்து நான் குறித்த வங்கியிடம் முறையிட்டுள்ளேன். இன்று காலை சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்ப்பார்க்கிறேன் என ரெட்டா தனது உத்தியோகபூர்வ சமூக வலைதளம் ஊடாகவும் பதிவொன்றினை இட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தப்பட்ட அஞ்சல்....

மேலும், அனுமதிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் சலுகை கட்டணமும் திருத்தப்பட்டுள்ளது. 20 கிராமுக்கு 12 ரூபாவாக காணப்பட்ட குறித்த கட்டணம் 30 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளதோடு

பதிவுத் தபால் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 60 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையத்தினால் பொறுப்பேற்கப்படும், கொழும்பு 1 முதல் 15 வரையான பிரதேசங்களுக்கு இடையிலான கடிதங்களுக்கான கட்டணம் 12 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக திருத்தப்பட்டுள்ளது.

இதுவரை 10 ரூபாயாக இருந்த தபால் அட்டையின் விலை 20 ரூபாவாகவும், ஒரு நாள் தபால் அடையாள அட்டை சேவை கட்டணம் 100 ரூபாவில் இருந்து 200 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காசுக்கட்டளை, பொதிகள் சேவை கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## பாடசாலைகள் இன்று...

கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்சினை காணப்படும் பகுதிகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக பொருத்தமான போக்குவரத்து வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக சகல மாகாண அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகும் பாடசாலை வாரத்தில் போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக உரிய வகையில் அதிபர்களினால் சலுகை வழங்கப்படும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த சலுகை வழங்கப்பட வேண்டிய முறைமை தொடர்பில் மாகாண கல்வி பணிப்பாளர்களினால் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று மாதங்களில் பாடங்களை உரிய முறையில் கற்பிப்பதற்காக பாடசாலை நேரம் பயன்படுத்தப்பட வேண்டும். பாடசாலை நேரத்திற்கு மேலதிக பாடநெறிக்கு புறம்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவும், பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளை மட்டுப்படுத்துவதற்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓரணியாக இணைந்து நாட்டை...

எதிர்க்கட்சித் தலைவர், ராஜபக்சர்களால் இந்நாட்டின் முதுகெழும்பு உடைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் “ஐக்கிய பாதை”க்கு பதிலாக “தவறான பாதையை” தெரிவு செய்ததன் அவலத்தை இன்று நாடு எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டை கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய மக்கள் சக்திக்கே உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியில் (13) நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி பிரதான அமைப்பாளர் சட்டத்தரணி எரந்த வெலியங்க இதனை ஏற்பாடு செய்திருந்தார்.

தற்போதைய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை அரசியலமைப்பு ரீதியாக சரியானது என்றாலும், அங்கீகாரம் மற்றும் மக்கள் அபிப்பிராயம் என்ற அடிப்படையில் இது முற்றிலும் மாறுபட்ட நிலை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தை விட நிகழ்காலம் முற்றிலும் மாறுபட்டது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்நாட்களில், பெரும்பாலும் அரசியல் முடிவுகளை எடுப்பதில் முன்னுரிமை பெற்றது பெரியவர்களே என்றாலும், இன்று இளம் தலைமுறையினர் அதை வீட்டில் கூட பெற்றுள்ளனர் எனவும் தெரிவித்தார். தேர்தலில் முடிவெடுப்பது குறித்து வீட்டில் செல்வாக்கு செலுத்துவது இளைஞர் சமுதாயத்தினரின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களின் பிரகாரமே என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் புரிந்து கொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு.

தம்மிடம் இரத்தம் சிந்திய வரலாறு இல்லை எனவும், தமது வங்கிக் கணக்குகளில் போதைப்பொருட்கள் விற்ற பணம் இல்லை எனவும், தம்மிடம் எந்த வித கபடத்தனமும் இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஓர் அணியாக இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிபந்தனைகளுடனேயே....

திட்டமிட்டதை விட ஐந்து நாட்கள் தாமதமாக, அதாவது எதிர்வரும் 16 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை வந்தடையவுள்ளது. அத்துடன், இந்த கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 11 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையவிருந்தது. தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி இந்தியா கடுமையான கவலைகளை எழுப்பியிருந்த நிலையில் அதன் வருகை தாமதமானது.

இந்த விவகாரம் குறித்து மேலும் ஆலோசனைகள் நடத்தப்படும் வரை பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை சீனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தது. எவ்வாறாயினும், குறித்த கப்பல் சீனாவிலிருந்து, பயணத்தை ஆரம்பித்து 24 நாட்களின் பின்னரே, அதாவது இலங்கையை வந்தடைவதற்கு மூன்று நாட்கள் இருந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதியே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக அண்மையில் முன்னாள் ஜனாதிபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன அண்மையில் பாராளுமன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கினால் இந்தக் கப்பல் தொடர்பான கவலைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதன் வருகையை எதிர்ப்பதற்கான உறுதியான காரணங்களை வழங்குமாறு அவரிடம் கோரப்பட்டது. இதே செய்தியையே இந்திய தூதரக அதிகாரிகளுக்கு வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இரு தரப்பினரும் "உறுதியான காரணங்களை" முன்வைக்காததால், இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் கப்பலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் அனுமதிப்பது இலங்கைக்கு புவிசார் அரசியல் தலையிடியாக மாறியுள்ளது.

ஜனாதிபதி விக்கிரமசிங்க பதவியேற்பதற்கு முன்னர், கப்பலை நங்கூரமிடுவதற்கான அனுமதி இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA) ஆகியவற்றால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.




# பன்றிக்கு இட்ட மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் பலி

**ரமேஷ் ஆறுமுகம்**

உடப்புஸ்சலவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரூபஹா அம்பகாலியத்த கிராமத்தில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான எச்.எம்.பிரேமரத்ன (வயது 45) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக உடப்புஸ்ஸலாவை பொலிசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த நபர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள தனது உறவினர் ஒருவரின் வயல் நிலத்தை நாசமாக்கும் பன்றிகளை கட்டுப்படுத்த வேலியமைத்து அதற்கு சட்டவிரோதமாக மின்சாரம் வழங்கியுள்ளார்.

ஒவ்வொறு நாளும் இரவு வேளையில் மின்சாரத்தை வேலிக்கு பாய்ச்சிவிட்டு அதிகாலை 05 மணியளவில் மின்சாரத்தை நிறுத்தி விட்டே வயலுக்கு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (12) இரவு வழமைபோல வயல் நில பாதுகாப்பு வேலிக்கு மின்சாரத்தை வழங்கிவிட்டு நித்திரைக்கு சென்றுள்ளார்.

பின் சனிக்கிழமை (13) காலை வயலுக்கு சென்ற அவர் வயல் நில பாதுகாப்பு வேலிக்கு பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தை நிறுத்த மறந்து வயலுக்கு வேலியை தாண்டி சென்றபோது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் உடப்புஸ்சலாவ பொலிசார் தெரிவித்தனர்.

# வெள்ளப்பாதிப்பு பகுதியிலுள்ள நீர்நிலைகளின் நீரை அருந்த வேண்டாம் என அறிவுறுத்தல்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

வெள்ளம் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கிணறுகள், குளங்கள் ஆறுகள் மற்றும் ஏனைய நீர்நிலைகளின் நீரை அருந்த வேண்டாம் எனவும் அவை சுத்தப்படுத்தப்பட்டு கொதித்தாறிய நீ ரை அருந்துமாறு பொதுச் சுகாதாரக உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். இரத்தினபுரி மற்றும் சுற்றுப்புற பிரதேச மக்களுக்கு இப்பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் இந்த அறிவுறுத்தலை வழங்கி வருகின்றனர்.

கடந்தசில தினங்களாக இரத்தினபுரி மாவட்ட த்தில் பெய்த அடை மழை காரணமாக இப்பகுதியின் தாழ் நிலங்கள் வெள்ளத்தால் மூழ்கியதையடுத்து நிலவிய அச்ச நிலமை நீக்கியுள்ளது. தற்போது தாழ் நிலங்களில் தேங்கியுள்ள நீர் படிப்படியாக வடிய ஆரம்பித்துள்ளது எனினும் இப்பிரதேசத்தில் சில இடங்களில் நீர் முற்றாக வடியாது தேங்கி நிற்பதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

# பிரதமர் மோடியின் தலைமையில் இந்தியா அசுர வளர்ச்சி

**நுவரெலியா தினகரன் நிருபர்**

இன்று இந்தியா தனது 75 வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றது. இந்தியாவை தலைமையேற்று சிறப்பாக நிர்வகித்து வருகின்ற பிரதமர் நரேந்திர மோடி உட்பட இந்திய நாட்டின் அனைவருக்கும் மலையக மக்களின் சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் அயல்நாடான இந்தியா எமது நாட்டிற்குளப்போதெல்லாம்இன்னல்கள்ஏற்பட்டதோ அந்த அனைத்து சந்தர்ப்பத்திலும் ஒரு உற்ற நண்பனாக ஒரு சிறந்த வழிகாட்டியாக செயற்பட்டு எங்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்துவருகின்ற மிகச் சிறந்த வழிகாட்டியாகும்.

# உலக ஜனநாயகத்துக்கு முன்னுதாரணமாக இந்தியா திகழ்கிறது!

## இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் சுதந்திரதின வாழ்த்து



இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் இந்திய மக்களுக்கு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் சார்பாக இலங்கைத் தெரிழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் சுதந்திரதின வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக்காலம் தொட்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேணப்பட்டுவரும் நட்புறவு மற்றும் இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் இ.தொ.கா செயல்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய சுதந்திரதினத்தை முன்னிட்டு செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா வாகும்.

பல்லின, பல்மொழி பேசும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் அதன் பன்மைத்துவமே காரணமாகும்.

உலக ஜனநாயகத்திற்கு முன்னுதாரணமாக திகழும் இந்தியா சுதந்திரமடைந்து 75ஆண்டுகளை கடந்துள்ளது.

மக்களின் ஒற்றுமை, கூட்டாட்சித் தத்துவங்கள், அதிகாரப் பரவலாக்கல் மற்றும் ஆட்சிகள் மாறினாலும் நிலைமாறான அரசக் கொள்கைகளும் நிலைபேண்தகு பொருளாதார கொள்கைகளும் இந்தியாவின் வளர்ச்சிக்கு உந்துச்சக்தியாக அமைந்துள்ளது.

உலகத்தில் மிக பெரிய வல்லரசாக மாறுவதற்கான பயணத்தை நோக்கி இந்தியா சென்று கொண்டிருக்கின்றது.அதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு,எனது சுதந்திரதின வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

# 15 அடி உயரம் கொண்ட கஞ்சா மரத்துடன் ஒருவர் கைது



**( ஹாலிஎல விசேட நிருபர் )**

சட்டவிரோதமான முறையில் தனது காணியில் இரகசியமாக வளர்க்கப்பட்ட 15 அடி உயரமான பாரிய கஞ்சா மரத்துடன் ஒருவரை ஹலி எல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹாலி எல பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், ஹாலி எல ஊவா தீகல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் காணியில் இரகசியமாக நடப்பட்டிருந்த 15 அடி உயரமான இராட்சத கஞ்சா மரத்துடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

**டென்மார்க் தூதரக அலுவலகம்**

**2022 ஓகஸ்ட் 8ம்** திகதி முதல் கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு மாற்றப்படுகிறது.

**டென்மார்க் தூதரகம்**

**மெஸனைன் மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் கோபுரம்-1,**
**இல. 315, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**

அலுவலக வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை சாதாரண வேலை நேரங்களில் இயங்கும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

சனி, ஞாயிறு, போயா தினங்களில் மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் மூடப்பட்டிருக்கும்.

**தொடர்பு விபரங்கள்:**

**தொலைபேசி** : +94115556699
**தொலைநகல்** : +94115554545
**மின் அஞ்சல்** : kdconsul@sltnet.lk



## அறிவித்தல்

**கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்**

**வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்**

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் வெற்றிடம் நிலவுகின்ற கீழ் குறிப்பிட்டுள்ள 04 வலயங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான தகைமைகளைப் பெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.09.12 ஆகும்)

| மாவட்டம் | வெற்றிடம் நிலவும் வலயங்கள் |
|---|---|
| மட்டக்களப்பு | கல்குடா |
| | மட்டக்களப்பு மத்தி |
| அம்பாறை | சம்பாந்துறை |
| | திருக்கோவில் |

மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் கிழக்கு மாகாண சபையின் www.eq.gov.lk எனும் இணையத்தளத்திற்கு பிரவேசித்து Ministry of Education பக்கத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜீ. திசாநாயக்க,**
**செயலாளர்,**
**கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், முன்பள்ளிக் கல்வி, தகவல் தொழிநுட்பக்கல்வி, இளைஞர் விவகாரம், பனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு,**
**கிழக்கு மாகாணம்.**

15.08.2022


# இரத்தினபுரியில் வெள்ள சேதங்கள் கணக்கெடுப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக பெய்த மழை படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதனால் இம் மாவட்டத்தின் இரத்தினபுரி, நிவித்திகல, பெல்மதுளை, குருவிட்ட, எலபாத்த, அயகம பிரதேச தாழ்நிலங்களில் வெள்ள பெருக்கு நிலை தணிந்து வெள்ளம் வடிந்து வருகிறது. எனினும் ஆற்றங்கரைகளில் மனித செயற்பாடுகள் காரணமாகநீர் வடிந்து செல்வதில் தேக்க நிலை நிலவுவதாக நீர் வடிகாலமைப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக் கின்றனர். மழையும் வெள்ளமும் தணிந்து வருவதா ல் தமது இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி தமது இருப்பிடங்களை சீர் செய்யு ம் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அம்பிட்டிய சந்தியில் கோடீஸ்வர பெண் பட்டப்பகலில் கொலை

கண்டி வாவிக்கு அருகில் அம்பிட்டிய சந்தியில் வசித்து வந்த காணி மற்றும் சொத்துக்களுக்கு உரிமையாளரான கோடீஸ்வர பெண் ஒருவர் நேற்று(14) பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் இரண்டு பிள்ளைகளின் தாயான கமனி ரணசிங்க (64) என்பவராவார்.

அவர் தொழில் திணைக்களத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவராவார். குறிப்பிட்ட பெண்ணின் கணவர் அண்மையில் காலமானதோடு அவரின் பிள்ளைகள் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார்கள். கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு அம்பிட்டிய சந்தியில் பல கட்டிடங்கள் சொந்தமாகவுள்ளன. அதன் மூலம் மாதந்தோறும் அவருக்கு லட்சக்கணக்கில் கூலியாக பணம் கிடைத்து வந்துள்ளது.

பிற்பகல் 2 மணி அளவில் அவரது வீட்டிற்கு சென்ற வேளையில் பல இடங்களில் இரத்தக்கறைகள் காணப்பட்டதாகவும் கருப்பு நிற 5 அடி உயரமான மனிதன் ஒருவன் கையில் கத்தியுடன் வீட்டிலிருந்து வெளியேறுவதை கண்டதாகவும் அயலவர் ஒருவர் கூறியுள்ளார் . கத்தியை வைத்திருந்த மனிதனின் கையும் வெட்டுப்பட்டு இரத்தம் கசிந்ததாகவும் இது குடும்பப் பிரச்சினை எனக்கூறி தன்னையும் கத்தியை காட்டி மிரட்டியதாகவும் அந் நபர் தெரிவித்துள்ளார்.

வீட்டிற்குள் சென்று பார்த்த போது அப்பெண்ணின் முனங்கல் சத்தம் கேட்டதாகவும் சிறிது நேரத்தில் அவர் இறந்து விட்டதால் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லவில்லை என்றும் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் அவர் கூறினார். கொலை தொடர்பான சந்தேக நபரை கைது செய்வதற்காக கண்டி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள்.


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

**ஸ்பெயின் தூதரக அலுவலகம்**

**2022 ஓகஸ்ட் 8ம்** திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு மாற்றப்படுகிறது.

ஸ்பெயின் தூதரகம்

**தரை மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் கோபுரம்-1,**
**இல. 315, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**

அலுவலக வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை சாதாரண வேலை நேரங்களில் இயங்கும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

சனி, ஞாயிறு, போயா தினங்களில் மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் மூடப்பட்டிருக்கும்.

**தொடர்பு விபரங்கள்:**

**தொலைபேசி** : +94115533500/1
**தொலைநகல்** : +94115533502
**மின் அஞ்சல்** : consul_spain@sltnet.lk



## அறிவித்தல்

மல்லவபிடிய பிரதேச செயலாளர் என்.ஏ.ஏ.எஸ். பிரியங்கர ஆகிய என்னால் 2023ஆம் வருடத்திற்கான மல்லவபிடிய பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 01 கடுபிடிய கள்ளுத் தவறணை வாடகை விற்பனைக்காக விலைமனுவை 2022.09.12ஆம் திகதி மு.ப. 10.30 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பிட்ட நிபந்தனைகளுக்காக 2292ஆம் இலக்க 2022.08.05ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியைப் பார்க்கவும்.

**என்.ஏ.ஏ.எஸ். பிரியங்கர,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**மல்லவபிடிய.**

2022 ஆகஸ்ட் 10ஆம் திகதி
**மல்லவபிடிய பிரதேச செயலகத்தில்**



**இரத்தினபுரி மாவட்டத்தின் இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணையை விற்பனை செய்தல் -**

**2023ஆம் ஆண்டு பின்னவல இல. 02 கள்ளுத் தவறணை**

மேற்படி கள்ளுத்தவறணை 2022 செப்டம்பர் 13 அன்று மு.ப. 10.30 இற்கு இம்புல்பே பிரதேச செயலகத்தில் டெண்டர் மூலம் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

02. மேலதிக விபரங்கள், 2022 ஆகஸ்ட் 05ஆம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**ஜீ.பி.டீ. ரேணுகா**
**பிரதேச செயலாளர்**
**இம்புல்பே**

**2022.08.10**
**இம்புல்பே பிரதேச செயலகத்தில்**



திகதி 13.08.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4846
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,487,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.34,437,608.60
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 6 4 8 6 6 3

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 876
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,888,580.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 08 12 49 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,214,026.40

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3088
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,005,100.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 07 55 57 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.69,020,501.60

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 155
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,463,880.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 19 50 60 62 விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,733,581.60

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1194
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,003,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.256,418,478.00
W 18 37 38 63 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



திகதி 12.08.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4845
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,836,030.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,102,347.60
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 2 5 5 4 7 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 875
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,264,560.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 17 53 54 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,025,298.40

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3087
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,940,380.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 01 27 47 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.68,804,320.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 154
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,726,440.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 36 45 46 55 விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,711,771.00

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1193
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,061,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.265,418,158.00
X 12 51 55 56 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# சோளச்செய்கையை ஊக்குவித்து விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கு விஷேட கூட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**



ஸூம் செயலி ஊடாக சோளம் உற்பத்தியின் தற்போதைய நிலை குறித்த கலந்துரையாடல் ஒன்று அநுராதபுரத்தில் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.மாவட்ட மட்டத்தில் சோள உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர். இதில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்து கொண்டு கருத்து தெரிவித்தார்.

சோளத்திற்கு நியாயமான விலை வழங்கப்படும். சோளப்பயிர்ச் செய்கைகுத் தேவையான பசளை தேவையான நேரத்தில் வழங்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 2020/21 காலப்பிரிவில் சோள உற்பத்தி சுமார் 43000 மெற்றிக் தொன்னாக இருந்தது. எனினும் 2020/21 பெரும்போகத்தின் போது பசளை பிரச்சினை மற்றும் ஏனைய பிரச்சினைகளால் விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளதாக அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் திரு.ஜனக ஜயசுந்தர இதன்போது தெரிவித்தார். யூரியாப்பசளை, பூச்சிகொல்லிகள், களை கொல்லிகள், எரிபொருள் நெருக்கடி போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டால், அடுத்து வரும் போகத்தின்போது 40000 மெட்ரிக் தொன் உற்பத்தியை எதிர்பார்க்கலாம். இது சம்பந்தமாக சோளம்பயிரிடும் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது பொருத்தமானது எனவும் அவர்,இதன் போது குறிப்பிட்டார்.

இதில் கலந்து கொண்ட விவசாய சங்க பிரதிநிதி ஒருவர் கூறியதாவது: அரசை நம்பி விவசாயிகள் நிலத்தை தயார்செய்து, சோள உற்பத்திக்கு தேவையான பணிகளை ஆரம்பித்துள்ளனர். இதற்காக தரப்படுத்தப்பட்ட விதைகளை வழங்கவும், உரிய நேரத்தில் இரசாயன பசளையை வழங்கவும், எரிபொருள் பிரச்சினையை தீர்க்குமாறும் விவசாயிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். உற்பத்தியாகும் சோளத்தை கொள்முதல் செய்வதில் ஏற்படும் முறைகேடுகளை தவிர்த்து, விவசாயிகளுக்கு நியாயமான வருமானம் கிடைக்கும் வகையில் பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும் எனவும் விவசாய சங்க பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஸூம் செயலி மூலமாக, விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி. திரு. ரோஹன புஸ்பகுமார மற்றும் அதிகாரிகள் குழுவினரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

அநுராதபுரம் மாவட்ட உர செயலகத்தின் உதவிப்பணிப்பாளர் பந்துல குமார, மாகாண விவசாய திணைக்கள பிரதி விவசாய பணிப்பாளர் கயானி ரத்நாயக்க, மாகாணங்களுக்கு இடையிலான பிரதி விவசாய பணிப்பாளர் டி.டி. மாலா ரம்யலதா, நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

# நகர்வலம்



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும், சில கலைஞர்களுக்கும், 3500 பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்பட்டன. பொதுசன உதவி திணைக்களமும், கொழும்பு மாநகர சபை உறுபினர் ஜோசப் பொர்னாட்டோவினதும் ஏற்பாட்டில் நிகழ்ந்த இந்நிகழ்வு, கடந்த சனிக்கிழமை ஜோசப்பெர்னாண்டோவின் இல்லத்தில் நடைபெற்றது, இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனும் கலந்துகொண்டார்.

## இன்றைய செய்தி மஞ்சரியில் லண்டன் காதரின் ஆளுமை, சமூகத்தொண்டுகள் பற்றி கலந்துரையாடல்



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும், "செய்தி மஞ்சரி" நிகழ்ச்சியில், மர்ஹூம் கே.எம்.ஏ.காதர் அவர்களின், நினைவுகளை, மூத்த ஊடகவியலாளர் நௌஷாத் மொஹிதீன் நேயர்களோடு, பரிமாறிக்கொள்கிறார். திங்கட்கிழமை இன்று (15 இரவு, இந்நிகழ்வு இடம்பெறுகிறது.இந்நிகழ்ச்சியை,முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட தயாரிப்பாளர் முஹம்மத் ரெலீம் தயாரித்தளிக்கிறார்.மர்ஹூம் கே.எம்.ஏ. காதரின் அன்றைய எழுத்து, சமூக, அரசியல் பங்களிப்பு க்களை, இன்றும், நம் மூத்தோர் நெஞ்சில் நிலைத்து நிற்பது, இன்றைய தலைமுறையை, வியக்க வைக்கிறது.

தலைநகரில் கல்வித்துறை தூரமாகியுள்ளதை உணர்ந்த இவர், பெற்றோர்கள், மாணாக்கரை கல்வியின் பால் ஈர்க்க வைப்பதில், பெரும் தொண்டாற்றி சமூக மறுமலர்ச்சிக்கு, வித்திட்டார்.அந்நாட்களில், சமூக பற்றுணர்வுடன், செயலாற்றிய அரசியல் தலைவர்கள், சமூக ஆய்வாளர்களுடன், சமுதாய விழிப்புணர்வுக்கு இவர் தலைநகரில் பெரும் பங்காற்றினார்.இவரது புதல்வர், சப்ரிகாதர், இலங்கை சுங்க திணைக்கள உயரதிகாரியாக, பணியாற்றிவருவது குறிப்பிடதக்கது.



சென்னை வளர்ச்சிக் கழகம் சார்பில், பன்னாட்டு தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு கல்விக் கழகம் உலகெங்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு சிறப்பாக தமிழ்ப்பணி செய்துவரும் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு "வளர்தமிழ் மாமணி" விருது வழங்கப்பட்டது.இவ்விருதை, விஜிபி உலகத் தமிழ்ச்சங்கத் தலைவர் முனைவர் வி.ஜி.சந்தோத்திடம் தமிழ்நாடு சிறுபான்மை மற்றும் வெளிநாட்டு தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி மஸ்தான் வழங்கினார், அருகில் விஜடி பல்கலைக்கழக வேந்தர் கோ.விஸ்வநாதன் மற்றும் சென்னை வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத்தும் காணப்படுகிறார்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளத்தை பிறப்பிடமாகவும், கண்டி தென்னகும்புரையை வசிப்பிடமாகவும் கொண்ட அமானுல்லாஹ் எம்.ரிஸ்வி ஹுசைன், அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவானாக கண்டி நீதிமன்றத்தில் நீதிபதி மாலிந்த ஹர்சன த சில்வா முன்னிலையில் இவர்,சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர்,புத்தளம் ஹமீத் ஹுசைன் நிறுவனத்தின் உரிமையாளர் மர்ஹூம் அமானுல்லாஹ் ஹாஜியாரின் புதல்வராவார்.

சிறந்த சமூக சேவையாளரும், பிரபல நிறுவனமொன்றில் கட்டட முகாமையாளராகவும், கடமையாற்றும் அமானுல்லாஹ் எம். ரிஸ்வி ஹுசைன்,சிறந்த மும்மொழி ஆற்றல் கொண்டவர்.

இனங்களுக்குடையிலான ஒற்றுமை தொடர்பில் இவர்,சிறந்த ஆளுமையுடன் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டுச்சம்பவங்களில் ஈடுபட்டுவந்த இருவர் பொலிஸாரால் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**



அநுராதபுரம் பொலிஸ் வலயத்திலுள்ள கல்னேவ,ஹுரிகஸ்வெ,இப்பலோகம பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடய சந்தேக நபர்கள் இருவரை இப்பலோகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்திருந்தன. இதனடிப்படையில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், கலாவெவ வைத்தியசாலைக்கு அருகில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இதன்போதே, சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அவர்களிடமிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கி ஒன்றையும் குற்றத்தடுப்புபிரிவு பொலிஸார் கைப்பற்றினர்.கைது செய்யப்பட்டவர்கள் 52,38 வயதுடய கல்னேவ மற்றும் ஹுரிகஸ்வெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.தங்கச்சங்கிலி அறுத்தல்,வியாபார நிலையங்களை உடைத்தல்,வீடுகளை உடைத்தல், மோட்டார் சைக்கிள்களை திருடுதல் போன்ற சம்பவங்களில் இவ்விருவரும் ஈடுபட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர், சந்தேக நபர்கள் இருவரும் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.இதன்போது எதிர்வரும் (22) வரைக்கும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

# கிழக்கின் குரல்

## கல்முனை வடக்கில் கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ளுமாறு பகிரங்க அறிவிப்பு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கொவிட்19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் தங்களுக்கான தடுப்பூசியை சுகாதார அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளுமாறு கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் என். ரமேஸ் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது கொவிட்19 தொற்றின் வேகம் சடுதியாக அதிகரிப்பதால், பொதுமக்களை அறிவுறுத்தல் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கையில் சுகாதாரப்பிரிவினர் தொடர்சியாக ஈடுபட்டுவருகின்றனர். இந் நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றியாஸின் வழிகாட்டலில்,தடுப்பூசி செலுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில்,பொது மக்களுக்கு தெளிவூட்டப்படுகிறது.

இதற்கமைய கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஸ் தலைமையிலான பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள், இதுவரை கொவிட்19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் தொடர்பிலான தகவல்களை பெற்றுவருகின்றனர்.

# கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்துவதில் நிலவிவந்த இழுபறிக்கு சுமூகத் தீர்வு

**கல்முனை விசேட நிருபர்**



கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பதில் நிலவி வந்த இழுபறிக்கு சுமூகத் தீர்வு காணப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து நேற்று (14) அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளும் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மாட்டிறைச்சி வியாபாரிகள் மற்றும் மாடு விநியோகஸ்தர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில், இத்தீர்வு எட்டப்பட்டதாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், மாநகர சபையின் கணக்காளர் எம். எம்.றியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடுகளால், மாட்டிறைச்சியின் விலை முறையற்ற விதத்தில் அதிகரிக்கப்பட்டிருந்தது.

இதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இதைக்கருத்திற் கொண்டு, 01 கிலோ மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1600 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1800 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என முதல்வரினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும், கட்டுப்பாட்டு விலையை அமுல்நடத்துவதில் மாநகர சபைக்கும் இறைச்சிக் கடைக்காரர்களுக்குமிடையே இழுபறி நீடித்தது.

இதனால் பெரும்பாலான இறைச்சிக்கடைகள் (06) சனிக்கிழமை முதல் மூடப்பட்டன.

இந்நிலையில், மாட்டிறைச்சி வியாபாரிகள் மற்றும் மாடு விநியோகஸ்தர்களுடன் மாநகர சபை முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில், ஒருகிலோ மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1700 ரூபாவுக்கும், தனி இறைச்சி 1900 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

அத்துடன், கட்டாயம் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் இவற்றை மீறுவோரின் இறைச்சிக்கடை வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக முதல்வர் றகீப் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் அசாதாரண நிலையை தமக்குச்சாதகமாக பயன்படுத்திய சிலர், கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் ஒரு கிலோ மாட்டிறைச்சியை 2200 ரூபாவுக்கு விற்றமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விஷேட கலந்துரையாடல்



**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பான வழிகாட்டல் கலந்துரையாடல், திருகோணமலை மாவட்ட அரசசார் ஒன்றியத்தின் தலைவர் டாக்டர்.திரு.என். ரவிச்சந்திரன் தலைமையில் திருகோணமலை சர்வோதய நிலயத்தில் அண்மையில் (13) நடைபெற்றது.

இந்நிகழ்வில், இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். இதில், பல பேர் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடலில் மூவின சமூகத்தையும் சார்ந்த புத்திஜீவிகள், மத குருமார்கள், ஊடகவியலாளர்கள் பிரதேச சபை உறுப்பினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வு இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இளைஞர் திட்ட பிரிவு மற்றும் மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

## பாடசாலைகள், பல்கலைக்கழகங்களைத் திறக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்



**நிந்தவூர் குறூப் நிருபர்**

மூன்று ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களைத் திறக்கக் கோரி, தென்கிழக்குபல்கலைக்கழகத்தில் கடந்த (12) வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட, தொழில்நுட்பவியல் மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், அரசின் தற்போதைய அடக்கு முறையை கண்டித்து எழுச்சி கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன், கல்வி மற்றும் நலன் சார்ந்த விடயங்களை உடன் தீர்க்குமாறும், கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உடன் விடுவிக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

## நகரசபை விடயத்தில் சாய்ந்தமருதுவை ஏமாற்றியோருக்கு தக்கபாடம் புகட்டப்படும்

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகா

**நற்பிட்டிமுனை விஷேட நிருபர**

நாட்டில் பல சபைகள் நகர சபைகளாகவும், மாநகர சபைகளாகவும் தரமுயர்த்தப்டேுகையில், சாய்ந்தமருது நகரசபை விடயம் மட்டும் அநாதையாக்கப்பட்டுள்ளதாக,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

சாய்ந்தமருது நகரசபை விடயத்தில்,ஒரு அரசியல் கட்சி அம்மக்களை ஏமாற்றியுள்ளது.இதற்கான பாடத்தை இம்மக்கள் வெகு விரைவில் கற்பிப்பர்.

தோடம்பழக் குழுவினருக்கு தக்கபாடம் புகட்டுவதற்கு சாய்ந்தமருது மக்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் இந்த சபைகளை கலைப்பதன் மூலம் கிடைக்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு மிகக் குறைவாகவும் தேசிய காங்கிரஸுக்கு அதிகளவிலும் வாக்களித்த சாய்ந்தமருது மக்களை தே.கா உச்சளவில் ஏமாற்றிவிட்டது.

மு. கா தலைமை சாய்ந்தமருது நகரசபை விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. சாய்ந்தமருது மக்களின் கனவை நனவாக்குவதில் முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாகவுள்ளது. தே.கா. தலைவர் சாய்ந்தமருது மக்கள் வழங்கிய ஆணைக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். இது விடயத்தில் அவர் ஏதாவது முயற்சிகள் செய்வாராயின் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

சாய்ந்தமருதைச் சேர்ந்தவன் என்ற ரீதியில், அடிக்கடி தலைவர் ரவூப் ஹக்கீமிடம் நகரசபை விடயமாக பேசி வருகின்றேன்.

அதேவேளை நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து, தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்

- இலங்கையில் அந்நிய நேரடி முதலீடுகளுக்கு அதிகளவில் பங்களிக்கும் நாடுகளில் ஒன்று
- இந்தியாவில் பல்வேறு துறைகளில் முன்னணி நிறுவனங்களின் பிரசன்னம் இலங்கையில் அதிகளவாக உள்ளது
- இந்தியாவில் இருந்து வரும் அன்னிய நேரடி முதலீடு 2.2 பில்லியன் டொலருக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இன்னமும் அதிக முதலீடுகள் இடம்பெறவுள்ளன.






SVP TRADING CO. (PTE) LTD.
IMPORTERS OF ENGINEERING & INDUSTRIAL RAW MATERIALS
NO.29,SRIMAVO BANDARANAYAKKE MAWATHA, (PRINCE OF WALES AVENUE) COLOMBO -14.
Tel : 0112 4355 126 / 2446418 / 2448 995 / 2436 068
Fax : 2336198 Email: sales@svp.lk Web:www.svp.lk
BRANCH : NO.772,SIRIMAVO BANDARANAYAKE MAWATHA , (PRINCE OF WALES AVENUE) COLOMBO - 14. Tel : 011 2448991

Happy 76th Indian Independence Day
SKS S.K.SONS



Dealers in Forage, Fetilizer, Animal Feeds And Medicines
AUTHORISED AGENT FOR PRIMA LIVE STOCK FEEDS
25, Wolfendhal Street, Colombo - 13.
Tel: 011 - 2433105 Mob: 077 - 7396162

LAKE HOUSE
Coordinated by
Advertising Supplements Department
Lake House - Colombo
: 0112 429 339, 0777 270 076
Advertisments Coordinated by S.S. Prasath

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நீர்கொழும்பு மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையினால் கீழே காணப்படும் அட்டவணையில் உள்ள குத்தகையை 2022.10.15 முதல் 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட இரு பிரதிகளுடனான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | குத்தகை | குறைந்தபட்ச கேள்வித் தொகை ரூ | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூ. | கேள்வி விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | ராஜபக்ஷ பூங்காவின் ஐஸ்கிறீம் சாலை | 25000/- (மாதாந்தம்) | 3000/- | 3000/- |
| 02 | புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள வாகன நிறுத்துமிடம் | 65000/- (மாதாந்தம்) | 6500/- | 3000/- |
| 03 | விஸ்திரின் மாவத்த மாட்டிறைச்சி கடை | 576620/- | 57000/- | 3000/- |
| 04 | ஹெமில்டன் எல இறங்குதுறை படகுச் சேவையை நடத்திச் செல்லல் | 720000/- | 100000/- | 3000/- |

பெறுகை விண்ணப்பங்கள் விநியோகித்தல் : 2022.08.15 முதல் 2022.08.26 பி.ப. 2.30 வரை நீர்கொழும்பு மாநகர சபை கணக்காளர் பிரிவில்
பெறுகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைதல் : 2022.08.29 மு.ப. 10.00 இற்கு
பெறுகை விண்ணப்பங்கள் திறத்தல் : 2022.08.29 மு.ப. 10.30 இற்கு

**நிபந்தனைகள்:**

1. சகல கேள்விகளும் அவை குத்தகைக்கு வழங்கப்படும் தினம் முதல் ஒரு வருட காலத்திற்கு சட்டரீதியாகச் செல்லுபடியாகும். முதலாம் வருடத்திற்காக செலுத்தப்படும் கேள்வித் தொகைக்கு 5% அதிகரிப்புடன் இரண்டாம் வருடத்துடன் சம்பந்தப்பட்ட கேள்விக் கட்டணமாக அறவிடப்படும்.
2. விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவது மாதிரிப்பத்திரக்கட்டணம் மற்றும் வைப்புத் தொகையை செலுத்திய பின்னராகும்.
3. விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்கியதாக உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. விலைமனுக்கள் சமர்ப்பிக்க முடிவது இலங்கைப் பிரஜைகளுக்கு மட்டுமே.
5. சித்திகரமான கேள்விதாரரால் விஸ்திரின் மாவத்த மாட்டிறைச்சிக்கடை குத்தகைக்கு, கேள்விக் கட்டணத்தில் 25% தொகையையும், ஏனைய குத்தகைகளுக்கு 06 மாத கட்டணத்திற்கு சமமான தொகையையும் சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
6. உங்களால் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது மாதிரிப் பத்திரங்களை சரியாகப் பூர்த்தி செய்து வைப்பு பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இணைத்து மூலப் பிரதி, நகல் பிரதியை வேறு வேறாக கடித உறைகளில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் மற்றும் மூலப் பிரதி அல்லது நகல் பிரதி என்று குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறித்த தினம், குறித்த நேரத்திற்கு கிடைக்குமாறு அனுப்பலாம் அல்லது நேரில் மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளர் (031-2222275) மூலம் அறிந்து கொள்ளலாம்.
7. கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூல அனுமதியுடைய ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.
8. ஏதாவது நியாயமான காரணங்கள் இன்றி சித்திகரமான கேள்வி தாரரால் கேள்வியை நிராகரிப்பின் அவரது கேள்வி வைப்பு சபைக்கு உரியதாக்கப்படும்.
9. இக் கேள்வி சம்பந்தமான இறுதித் தீர்மானம் சபைக்கு உரியது.

**2022.08.10ம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்**

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை, நீர்கொழும்பு**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6178(MW) | Supply, Installation, Testing & Commissioning of Manual Vertical Turning & Boring Machine | 800,000.00 | 12,500.00 | 08-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6295(HM) | 01 No. Hydro Pen System with CO2/DCP Application | 80,000.00 | 1,000.00 | 13-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6361(MP) | 3008KG Wire Rope Lubricant for Container Cranes | 130,000.00 | 3,500.00 | 13-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6287(EL) | Fan Coils for Chilled Water Air Conditioning System of Pilot Station | 40,000.00 | 1,000.00 | 13-09-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/04/013 | Exhaust Fans & Ceiling Fans | 40,000.00 | 1,000.00 | 06-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/12/009 | Vegetable Cutters – 03 Nos | 17,500.00 | 1,000.00 | 06-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/054 | Speaker Horns for the Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 06-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/055 | Led Street Lamp Fittings | 20,000.00 | 1,000.00 | 07-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/051 | 30 Nos. of 825 X 15 14 – 18PR Tyres for 3.5T & 6T Fork Lift Trucks | 42,000.00 | 1,000.00 | 07-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/04/057 | Gold Coins – 22KT with SLPA Logo | 1,489,000.00 | 20,000.00 | 07-09-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பில் 1ஆம் இலக்க அபரெக்க செயற்றிட்ட அலுவலகத்தின் இயந்திரப் பிரிவில் கடமைகளுக்காக தொழிலாளர்களை (தகைமை வாய்ந்தவர்கள்) ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனு கோரல்

01. அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பிரிவில் பின்வரும் செயற்பாட்டிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | விலை மனுப் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| RDA/ EOM&M/ GOSL/ESEP/ MECH. LAB/ 2022/30 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பில் 1ஆம் இலக்க அபரெக்க செயற்றிட்ட அலுவலகத்தின் இயந்திரப் பிரிவில் கடமைகளுக்காக தகைமை வாய்ந்த தொழிலாளர்களை வழங்குதல் | 04 | 12 | 50,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2022-12-06) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த பிணை முறி 2023.01.03ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்.
08. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022-08-30ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கஹட்டகஹ ஹேன, வல்கம, பண்டாரகமயில் அமைந்துள்ள வீதி அபிவிருத்திக்கு உரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ளல் கட்டாயம் என்பதுடன் அவ்வாறல்லாத நிறுவனங்களின் விலைமனுக்கள் இரத்துச் செய்யப்படுவதற்கு அல்லது கையளிக்கப்படுவதற்கு தகுதியீனமாக்குவதற்கும் இடமுண்டு.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு விலை கோரலுக்காக மீளளிக்கப்படாத 3,000.00 + 360.00 (VAT) ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்தி கஹட்டகஹாஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2022-08-15ஆம் திகதி முதல் 2022-09-05ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். 2022-09-06ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு நிறைவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022-09-06ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹா ஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '' தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பில் 1ஆம் இலக்க அபரெக்க செயற்றிட்ட அலுவலகத்தின் இயந்திரப் பிரிவில் கடமைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குதல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. கஹட்டகஹாஹேன, வல்கம, பண்டாரகம எனும் இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
    ➢ பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011-3047806

**தலைவர்**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**
**கஹட்டகஹ ஹேன, வல்கம, பண்டாரகம.**

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### திறைசேரி வளவிற்கு நிலச்சீராக்கல் (Landscaping) சேவைக்கான பெறுகை 2022/2023

ஒருவருட ஒப்பந்தக் காலத்திற்கு திறைசேரி வளவிற்கு நிலச்சீராக்கல் சேவைக்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் இடம்பெறும்.

03. தகுதிவாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-01, செயலகம், நிதி அமைச்சின் கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து 011-2484538/011-2484600 (நீடிப்பு. 1430) எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022 செப்டெம்பர் 02ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:

- வியாபாரப் பதிவு ஒழுங்குபடுத்தலின் கீழ் பதிவு செய்துகொண்டிருத்தல்
- திருப்திகரமான தடப் பதிவு சகிதம் 3 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத வருடாந்தப் பெறுமதியைக் கொண்ட ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தம் சகிதம் கடந்த மூன்று வருடங்களினுள் 3 புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு நிலச்சீராக்கம் மற்றும் தோட்டப் பராமரிப்பு வேலைகளைச் செய்தலில் ஆகக் குறைந்தது 3 வருட கால அனுபவம். விலைமனு படிவத்தின் 1வது இணைப்பின் பிரகாரம் விலைமனுவுடன் வாடிக்கையாளர்களின் பட்டியலைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விலைமனுதாரர் 2 மரப் பராமரிப்பாளர்கள் உட்பட 06 தோட்ட தொழிலாளர்கள் சகிதம் ஒரு தோட்ட அபிவிருத்தி உதவியாளர் (மேற்பார்வையாளராக) என்பவர்களை வரிசைப்படுத்தும் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன. இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 1500.00 ரூபா தொகையை 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 02ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் செலுத்துவதன் பேரில் கொழும்பு-01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, புதிய கட்டிடம், மேல் தரைத்தளம், நிதிப் பிரிவு, பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப் பிணை முறியானது 60,000.00 ரூபா (அறுபதாயிரம் ரூபாய் மட்டும்) தொகைக்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயருக்கு முகவரியிடப்பட்டு விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 105 நாட்களுக்குச் (2022 செப்டெம்பர் 05ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 18ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்களை 2022 செப்டெம்பர் 05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில், கொழும்பு -01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரை தளத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, மேல் தரைத்தளம், நிதி அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு -01 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திறைசேரி வளவிற்கு நிலச்சீராக்கல் சேவைக்கான பெறுகை 2022/2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரைத் தளத்தின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் மட்டும் கலந்துகொள்ளலாம்.

08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஆகஸ்ட் 24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கொழும்பு -01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரை தளத்தின் கணக்கிடல் பிரிவில் இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,**
**லோட்டஸ் வீதி,**
**கொழும்பு -01.**

# சிறு விளம்பரம்

## வர்த்தகம்

233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

கெபித்திகொல்லாவ பிரதேசத்தில் பாவனையில் உள்ள கல்மணல் அகற்றும் நெல் ஆலை விற்பனைக்கு. அழையுங்கள். 077 8341363. 046825

Repeat Your Ad For Better Offers

# பாரளுமன்றம் PARLIAMENT

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

## சுசரண லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அசங்க நவரத்ன ஆகிய நான் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சுசரண லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

01. குறை வருமானம் பெறுவோரின் பிள்ளைகளை நோக்காகக் கொண்டு கல்விப் புலமைப்பரிசில்கள், பாடசாலை உபகரணங்களை வழங்குதல் மட்டுமல்லாது ஏனைய நன்கொடைகள் மற்றும் உதவிச் சேவைகளை அமுல்படுத்தல்.
02. வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து இந்நாட்டு பிள்ளைகளுக்கு பலதரப்பட்ட துறைகள் ஊடாக சர்வதேச தரத்திலான அறிவு மற்றும் அனுபவங்களை வழங்குதல் மற்றும் நாடுகளுடன் அறிவுப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
03. கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் நூலக வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பிள்ளைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த இலக்கு வைத்து அப் பாடசாலைகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய பௌதீக வசதிகளை வழங்குதல், இலக்கிய ஆக்கங்கள் மற்றும் பிற ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
04. எதிர்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்குப் பொருந்தும் வகையில் பிள்ளைகளிடம் தொழில் முயற்சிப் பண்புகள் மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒவ்வொரு துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களின் ஊடாக பிள்ளைகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

**பிறவும்.**

**அசங்க நவரத்ன**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**குருநாகல் மாவட்டம்.**

# நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு

## கள்ளுத் தவறணை மற்றும் வெளிநாட்டு மதுபானத்திற்கான குத்தகை விற்பனை – 2023

மேற்குறித்த குத்தகை விற்பனைக்கான விலைமனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் குறிப்பிட்ட நேரம் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| விபரம் | திகதி | நேரம் |
|---|---|---|
| கள்ளுத் தவறனை குத்தகை | 2022.09.23 | மு.ப. 10.30 |
| வெளிநாட்டு மதுபானத்திற்கான குத்தகை | 2022.09.23 | மு.ப. 10.30 |

19.08.2022 திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2294இன் பகுதி 1: பிரிவு (11 ஆ) - விரிவாக வெளியிடப்பட்டுள்ளது மற்றும் www.documents.gov.lk வலைத்தளத்தைப் பார்வையிட்டு தகவல்களைப் பெறலாம்.

**ஏ.யு. பதிரண**
**பிரதேச செயலாளர்**
**நீர்கொழும்பு**

**2022 ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி**
**நீர்கொழும்பு பிரதேச செயலகம்**

# பெறுகை அறிவித்தல்

வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### இபெகூ தலைமை அலுவலகத்தின் மத்திய வளிச்சீராக்கி முறைமையின் 03 எண்ணிக்கையான குளிராக்கிக்கு கொன்டன்சர் கொயில் திருத்தவேலைக்காக (System B) (Condenser Coil Repair) விலைக்கோரல்

### B/45/2022

இபெகூ தலைமை அலுவலகத்தின் மத்திய வளிச்சீராக்கி முறைமையின் 03 எண்ணிக்கையான குளிராக்கிக்கு கொன்டன்சர் கொயில் திருத்தவேலை (System B) ஒப்பந்தத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 892.86 + 12% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022-09-05ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 10,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-09-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

# சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம

## பெறுகை அறிவித்தல்

01. எமது வைத்தியசாலைக்குத் தேவையான உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

Data Storage Server

| கேள்வி இலக்கம் | உபகரணத்தின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படும் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | Data Storage Server | 02 | ரூபா 2,000.00 |

02. இலங்கை சந்தைக்காக மேற்குறிப்பிடப்பட்ட உருப்படிகளை வழங்கும் எந்தவொரு விலைமனுதாரர், பிரதிநிதியொருவர் அல்லது பெயரிடப்பட்டவர் மட்டும் மேற்படி கேள்விக்காக முன்வர தகைமை பெறுவர்.

**கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில்**

I. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளருக்கு அனுப்பும் வேண்டுகோள் கடிதம்
II. சகல கேள்வி மாதிரியின் பொருட்டும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா ரொக்கப் பணத்தை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்தப்பட வேண்டும்.
III. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
IV. 2022-08-16ஆம் திகதி முதல் 2022-09-04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விப்படிவங்களைச் சமாப்பிக்கும் வேளையில்**

I. இலங்கையினுள் மேற்படி ஒப்பந்த வழங்கலுக்காக செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
II. இந்த உருப்படியை வழங்குவற்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
III. அனைத்துக் கேள்வியின் பொருட்டும் 2% வீதத்துக்கான கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். (கேள்விப் பிணைக்காக காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது)
IV. கேள்விப் படிவங்களும் இரு பிரதிகளில் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்வியைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
V. அனைத்துக் கேள்விகளும் வழங்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
VI. 2022-09-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முழுமையற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
VII. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.

03. விலைகள் சகிதமான கேள்விப் படிவங்களை 2022-05-26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தொலைபேசி இல. : 011 2839589/011 2850252/011 2850253**
**தொலைநகல்: 0112839589**

**தலைவர்,**
**பிராந்திய கேள்விச் சபை,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

# மக்கள் வங்கி

## மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கி நுவரெலியா பிராந்தியத்தின் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2020.12.31 திகதி வரை அடகு வைக்கப்பட்டு 13.09.2022 திகதி வரை மீட்கப்படாத தங்கநகைகள் ஏல விற்பனை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| **ஏலமிடும் திகதி** | **14.09.2022** |
| ஏலமிடும் இடம் | மக்கள் வங்கி நுவரெலியா கிளை |
| கிளை | ஹங்குராங்கெத்த, இரகாலை, தலவாக்கலை, நில்தண்டாகின்ன, நுவரெலியா, பூண்டுலோயா, மஸ்கெலியா, ஹட்டன், உபுசல்லாவ, கினிகத்தேன, ரிகில்லகஸ்கட மற்றும் பொகவந்தலாவ |
| சேவை நிலையங்கள் | பதியபலல்ல, ஹேவாஹட்ட, அதிகாரிகம, இராகலை, ஆகரபத்தன, வலப்பன, கந்தபொல, நானுஓயா, தவலந்தென்ன, ஹபுகஸ்தலாவ, அப்கொட், டிக்கோயா, கொட்டகலை மற்றும் வட்டவளை |

ஏல விற்பனையில் மற்றம் செய்தல், பிற்போடுதல், இரத்து செய்தல் மற்றும் இடத்தை மாற்றல் போன்றவைகளுக்கு வங்கி சட்டபூர்வ அதிகாரத்தை கொண்டுள்ளது.

**பிரதேச முகாமையாளர்,**
**பிரதேச பிரதான காரியாலயம்,**
**மக்கள் வங்கி நுவரெலியா.**

**தொலைபேசி 052-2222555**
**052-2234036**
**052-2235282**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

# கேள்விமனுக் கோரல்

## வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை

### சுயாதீன தொலைக்காட்சி இணையத்தளத்திற்காக ON DEMAND VIDEO STREAMING மற்றும் LIVE VIDEO & AUDIO STREAMING சேவையை பெற்றுக்கொள்ளல்

**விலைமனுக்கோரல் இலக்கம் : ITN/Q/157/2021**

01. வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் சுயாதீன தொலைக்காட்சி இணையத்தளத்திற்காக ON DEMAND VIDEO STREAMING மற்றும் LIVE VIDEO & AUDIO STREAMING சேவையை பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கோரல்.
02. இந்த கேள்விமனுக்கோரலானது பகிரங்க போட்டிகர கேள்விமனு விதிமுறைகளுக்கு அமைய இடம்பெறும்.
03. டெண்டரை வழங்குவதற்காக கேள்வி மனுதாரர்கள் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
    - i. அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக பதிவுச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.
    - ii. இவ்வாறான ON DEMAND VIDEO STREAMING மற்றும் LIVE VIDEO & AUDIO STREAMING சேவையை வழங்குவதற்காக குறைந்தபட்சம் 3 வருடகால அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
    - iii. 24/7 நேரடி பாவனையாளர் சேவை உதவி மற்றும் துணைசேவை மத்திய நிலைய வசதிகள் காணப்படல்.
04. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு 2022 செப்டம்பர் மாதம் 5ம் திகதி பி.ப 3.00 மணி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை ஆங்கிலமொழியிலான கேள்விமனுக் கோரல் பத்திரத்தை பரிசீலனை செய்து, பத்தரமுல்லை, விக்ரமசிங்கபுர, வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முகாமையாளருக்கு (கொள்முதல்) எழுத்து மூலம் கோருவதன் மூலமோ அல்லது மீள் செலுத்தப்படாத ரூ. 5.000.00 + வற் வரியுடனான கட்டணத்தை செலுத்துவதன் மூலமோ கேள்விமனுக்கோரலுக்கான பத்திரத்தை கொள்வனவு செய்ய முடியும்,
05. இது தொடர்பான மேலதிக தகவல்களை தொலைபேசி இலக்கம்: 0112774592/ பெக்ஸ் இலக்கம்: 011 2774591/ மின்னஞ்சல் முகவரி engineering@itn.lk மூலம் வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பிரதிப் பொதுமுகாமையாளர் ( பொறியியல்) மூலமோ அல்லது தொலைபேசி இலக்கம்: 011 2775493/மின்னஞ்சல் முகவரி supplies@itn.lk மூலமோ முகாமையாளரிடமிருந்து (கொள்முதல்) பெற்றுக் கொள்ள முடியும்.
06. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு, பிரதியொன்றுடன் கேள்விமனு ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினமான 2022 செப்டம்பர் மாதம் 6ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பத்தரமுல்லை, - விக்ரமசிங்கபுர, வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைமை அலுவலகத்தின் முன்புறத்திலுள்ள பாதுகாப்புபிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். தாமதமாகிக் கிடைக்கும் கேள்வி மனுக்கோரல்கள் நிராகரிக்கப்படும்.
07. 2022 செப்டம்பர் மாதம் 6ம் திகதி பி.ப 2.30க்கு பத்தரமுல்லை, விக்ரமசிங்கபுர, வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பொறியியல் பிரிவு அலுவலகத்தில் கேள்விமனுதாரர்களோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விமனுப் பத்திரங்கள் திறக்கப்படும்,
08. கேள்விமனுக்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுயாதீன தொலைக்காட்சி இணயத்தளத்திற்காக ON DEMAND VIDEO STREAMING மற்றும் LIVE VIDEO & AUDIO STREAMING சேவையைப் பெற்றுக் கொள்ளல் - விலைமனுக்கோரல் இலக்கம் ITN/Q/157/2021" எனக் குறிப்பிட வேண்டும்.
09. சகல கேள்விமனுக்கோரல்களுடன் ரூ.150.000.00 கேள்விமனு பிணைமுறியொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை,**
**விக்ரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**

**15.08.2022**

**லூசியன் பெரேரா அஸோஸியேட்ஸ்**
**சட்டத்தரணிகள், பிரசித்த நொத்தாரிஸ்கள்,**
**51/64, குணசிங்ஹபுரம் சட்டத்தரணி வளாகம்,**
**டயஸ் பிளேஸ், கொழும்பு -12.**

# மாவட்ட நீதிமன்றம் கொழும்பு

## அறிவித்தல் சம்பந்தமான விண்ணப்பம்

இல. 3181 பே விவ் ஆவேன்யு, தொடர்மாடி 214, டொரேண்டோ, ஒண்டாரியோ M 2k 272 கனடாவை சேர்ந்த காலஞ்சென்ற மொஹமட் ரஷீன் சாலிஹ் சம்பந்தப்பட்ட கடைசி உயில் மற்றும் ஏற்பாடு சம்பந்தமானது.

**வழக்கு இல.** DTS/00165/22
**இயல்பு:** உயில் **மரணித்தவர்**
**மதிப்பு:** Rs. 151,195,383/01

**மற்றும்**

குடியியல் சட்டக்கோவை (அத்தியாயம் 101) அத்தியாயம் xxxviiiBஇன் 554U பிரிவின் கீழ் வெளிநாட்டு தகுதி காண்பதனை மீள் முத்திரை இடுவதற்கான விண்ணப்பம்.

1. 23, டேன்விலே டிரைவ் டொரோண்டா ஒண்டாரியோ M2P, 1H7 கனடா, எனும் விலாசத்தில் வசிக்கும் யுபாரெட் சாலிஹ் அல்லது யுபாரெட் ஆயிசா சாலி
2. இல. 52, லோங்வுட் டிரைவ் டொரோண்டோ ஒண்டாரியோ M3B1T8 கனடாவில் வசிக்கும் யுபாரெட் ஜமாலியா சாலி,

இந்த உயில் மற்றும் மரண சாசன பத்திரத்தில் பெயரிடப்பட்டுள்ள நிறைவேற்றுபவர்கள், அவர்களுடைய சட்டத்தரணி இல 7, பாவா பிளேஸ் கொழும்பு 7ஐ சேர்ந்த பாத்திமா அஸ்க்கியா மூலம் ஆஜர் ஆகிறார்கள்.
**மனுதாரர்கள்**

இல. 3181 பெ விவ் அவெனு தொடர் மாடி 214 ஒண்டாரியோ M2K272. கனடா வில் வசித்து மரணித்தவரான மொஹமட் ரஸீன் சாலி அவர்களின், சொத்துக்கள் சம்பந்தமாக ஒண்டாரியோ உச்ச நீதி மன்றத்தினால் வழங்கப்பட்ட தகுதிகாண் ஆதனத்தை, மீள் முத்திரை இடுவதற்கு குடியியல் சட்டக்கோவை (அத்தியாயம் 101) அத்தியாயம் xxxviiiBஇன் 554U பிரிவின் கீழ், கொழும்பு மாவட்ட நீதி மன்றிற்கு, இங்கு குறிப்பிட்ட நாள் தொடக்கம் 28 நாட்களில் விண்ணப்பிக்கப்படும் என அறிவிப்பு விடுகிறோம்.

2022 ஆடி மாதம் 15ம் திகதி

**ஒப்பம்: லூசியன் பெரேரா அஸோஸியேட்ஸ்,**
**மனுதாரரின் சட்டத்தரணிகள்**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**மஹாவலி நீர் பாதுகாப்பிற்கான**

# முதலீட்டுத் திட்டம் (MWSIP)

## திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU)

**Loan 3625-SRI – Tranche 2**

## விலைமனுக்களின் மூடும் திகதியின் நீடிப்பு

### (பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)
### 2022/23 ஆண்டுகளுக்காக மஹா பருவ நெல் அறுவடைக்காக மிருரியேட் ஒவ் பொட்டஷை வழங்கல்

**MI/MWSIP/ADB/GDS/MOP FERTILIZER/ OCB/2022/037**

**2022.07.27** ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்டுள்ள பண்டங்களுக்கான விலைமனுக்களுக்கான அழைப்பிற்காக பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

- கடந்த உடனடியான மூன்று (3) வருடங்களில் உர வழங்கலுக்காக பெற்றுக் கொண்ட மொத்தமாக அத்தாட்சிப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்ட பணக்கொடுப்பனவுத் தொகையான 80 மில்லியன் அ.ஐ. டொலரை ஆகக் குறைந்த வருடாந்த நிதிப்புரள்வாக விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரமானது 2022.08.24 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணியாகும்
- விலைமனுக்கள் 2022 ஒகஸ்ட் 24 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும்.

**திட்ட பணிப்பாளர்,**
**மஹாவலி நீர் பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**இல.: 493 1/1,**
**T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தொலைபேசி இல.: +94 11 2675810**
**தொலைநகல் இல.: +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

தினகரன்
# விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 ஓகஸ்ட் 15 திங்கட்கிழமை

## புளூஸ் மற்றும் ரெட்ஸ் இறுதிப் போட்டி இன்று



இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் அழைப்பு டி20 தொடரின் இறுதிப் போட்டியில் இன்று (15) புளூஸ் மற்றும் ரெட்ஸ் அணிகள் மோதவுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆரம்ப சுற்றுப் போட்டியில் குசல் மெண்டிஸ் தலைமையிலான ரெட்ஸ் அணி தனஞ்சய டி சில்வா தலைமையிலான புளூஸ் அணியை 33 ஓட்டங்களால் வீழ்த்தியே இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஏற்கனவே புளூஸ் அணி முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டிய நிலையில் அந்த அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதன்மூலம் கரேய்ஸ் மற்றும் கிரீன் அணிகள் இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தன.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு இறுதிப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

## ஆசியக் கிண்ணம்: பங்களாதேஷ் அணித் தலைவராக சகீப் தெரிவு

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணம் நிறைவடையும் வரை பங்களாதேஷ் அணியின் தலைவராக அனுபவ வீரர் சகீப் அல் ஹசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஜ்முல் ஹஸனுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர், சகீப் அல் ஹசன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணத்துக்கான குழாத்தை அறிவித்துள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, அணியின் தலைவராக சகீப் அல் ஹசன் செயற்படவுள்ளமையையும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதில் முக்கியமான மாற்றமாக முன்னணி துடுப்பாட்ட வீரர் லிடன் தாஸ் உபாதை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். ஆசியக் கிண்ணத் தொடர் இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், போட்டிகள் அனைத்தும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் ஆரம்ப சுற்றில் பி



குழுவில் இடம்பெறும் பங்களாதேஷ் அணி ஆப்கான் மற்றும் இலங்கையை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான போட்டி செப்டெம்பர் 1 ஆம் திகதி நடைபெறும்.

பங்களாதேஷ் குழாம்

சகீப் அல் ஹசன் (தலைவர்), அனாமுல் ஹக் பிஜோய், முஷ்பிகூர் ரஹீம், அபிப் ஹுசைன், மொஸ்தாக் செய்கத், மஹ்முதுல்லாஹ் ரியாத், செயிக் மெஹிதி, மொஹமட் சய்புதீன், ஹசன் மஹ்மூத், முஸ்தபிசுர் ரஹ்மான், நசும் அஹ்மட், சபீர் ரஹ்மான், மெஹிதி ஹசன் மிராஷ், எப்டொட் ஹுசைன், பர்வெஷ் ஹொசைன் இமோன், நூருல் ஹஸன் சொஹான், டஸ்கின் அஹ்மட்.

## பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணிக்குச் சம்பியன் கிண்ணம்



(பாலமுனை விசேட நிருபர்)

பொத்துவில் மெரைன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட சம்மர் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. பொத்துவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பொத்துவில் றைஸ் ஸ்டார் அணியையே ரொக் சலஞ்சர்ஸ் தோற்கடித்தது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக ரொக் சலஞ்சர்ஸ் அணியின் எஸ். சனுஸஸ் மற்றும் தொடரின் சிறப்பாட்டக்காரராக றைஸ் ஸ்டார் அணியின் நுஸ்கி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## திருகோணமலை கிரிக்கெட் அணி தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவட்டங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் திருகோணமலை மாவட்டம் கிழக்கு மாகாண சம்பியனாகி தேசிய போட்டிக்கு தெரிவாகியது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் பங்கு கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (13) மாலை நடைபெற்றது.

இதன் இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியையே, திருகோணமலை அணி வீழ்த்தியது.

இதேவேளை பெண்களுக்கான கிழக்கு மாகாண மட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனானதோடு இரண்டாமிடத்தினை திருகோணமலை மாவட்டம் பெற்றது.

## கனகநாயகம் கல்லூரி அணி தேசிய மட்டத்திற்குத் தெரிவு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)



அண்மையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மகளிர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற பலாங்கொடை கனகநாயகம் தமிழ் மத்திய கல்லூரியின் மகளிர் அணி இரண்டாவது இடத்தை பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது. எம்பிலிபிடிய மகவெலி விளையாட்டு அரங்கில் இடம் பெற்ற இந்த மகளிர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 21 பாடசாலை அணிகள் பங்கு கொண்டன. இறுதிப் போட்டியில் ஆடிய பலாங்கொடை ஜயந்தி மத்திய மகா வித்தியாலயமும் கனகநாயகம் மத்திய மகா வித்தியாலயமும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகி உள்ளதாக ஆசிரியர் ஏ.எம். இன்சாப் தெரிவித்தார்.

## பராசக்தி விளையாட்டு கழகத்தின் 50ஆவது பொன் விழா நிகழ்வுகள்

வடமராட்சி, மாவடி பராசக்தி விளையாட்டுக்கழகத்தின் 50ஆவது ஆண்டு பொன் விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை (13) இடம்பெற்றன.

கயிறு இழுத்தல் போட்டி உள்ளிட்ட கிராமிய விளையாட்டுகளில் மாவடி பராசக்தி விளையாட்டு கழகத்தினர் தலைசிறந்து விளங்கிவருகிறார்கள். கழகத்தின் பொன்விழா நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டார்.

பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக, கழகத்தின் மூத்த வீரர்களுக்கான கௌரவிப்பும், புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியில் கல்விசார் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 20-08-2022 இல. 21




## சர்வதேச செய்திகள்

## ருஷ்டியை தாக்கியவர் குற்றசாட்டை மறுப்பு

கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கான எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு பொருத்தப்பட்டிருந்த பிராணவாயு வழங்கும் கருவி நீக்கப்பட்டிருப்பதோடு அவரால் மீண்டும் பேச முடியுமாகியுள்ளது.

75 வயதான ருஷ்டி, நியுயோர்க் மாநிலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு இலக்கானார். அவர் ஆபத்தான நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவரது 'தி சாடானிக் வேர்சஸ்' என்ற நூலுக்காக அவர் பல ஆண்டுகளாக உயிரச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்து வந்தார். இந்த நூல் மதநிந்தனைக்குரியது என்று சில முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

இந்தத் தாக்குதலை நடத்திய நபர் கொலை முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டை மறுத்திருப்பதோடு பிணையின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

24 வயதான ஹதி மதார் என்ற அந்த ஆடவர் மேடை மீது ஓடி வந்து, ருஷ்டியின் முகம், கழுத்து மற்றும் வயிற்றில் குறைந்தது 10 தடவைகள் கத்தியால் குத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

லெபனான் பெற்றோருக்குப் பிறந்த ஹதி, ஈரான் புரட்சிக் காவல் படையில் ஈர்ப்புக் கொண்டவர் என்று கூறப்படுகிறது.



## இந்தியா– பங்களாதேஷ்: பாதுகாப்பு உறவினை பலப்படுத்த இணக்கம்

பாரிய அளவில் இராணுவங்களுக்கு இடையிலான செயற்பாடுகள், திறன் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்புத்துறை ஒத்துழைப்புடன் இரு தரப்பு பாதுகாப்பை மேலும் முன்னோக்கி இட்டுச் செல்வதற்கு இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையே இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இந்திய பாதுகாப்புச் செயலாளர் அஜேய் குமார் மற்றும் பங்களாதேஷ் ஆயுதப் படைப் பிரிவின் முதன்மை பணியாளர் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் வக்காருஸ்ஸமான் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற 4ஆவது இந்திய– பங்களாதேஷ் வருடாந்த பாதுகாப்பு பேச்சுவார்த்தையின்போதும் இந்த இணக்கம் எட்டப்பட்டது.



## ஆப்கானிய சிறுமிகள் குறித்து 'சேவ் தி சில்ட்ரன்' அறிக்கை



பொருளாதார நெருக்கடி, வரட்சி மற்றும் புதிய கட்டுப்பாடுகள் என்பன ஆப்கானிய சிறுமிகளின் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துள்ளதோடு சமூகத்திலிருந்து ஒதுக்கும் செயற்பாடுகளால் அவர்கள் பட்டினியாலும் வாடும் நிலைக்கும் முகம்கொடுத்துள்ளனர். இவர்களில் கால் பங்கினர் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள அறிகுறிகளைக் கொண்டுள்ளனர் என்று "சேவ் தி சில்ட்ரன்" என்ற உலகளாவிய தொண்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று ஓராண்டு நிறைவடைவதையொட்டி விடுத்துள்ள புதிய அறிக்கையிலேயே அந்நிறுவனம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் கம்பனியாரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.